Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–30 | 14–07–2004 | புதன்கிழமை | ஓசை –147

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464.
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-9943)

# யுத்தநிறுத்தத்தை செம்மையாக அமுல்படுத்துதல் தொடர்பான பேச்சிற்கே நேற்று முதலிடம்!

## நோர்வேத் தூதுவருடனான சந்திப்பின் பின் சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலகசெய்தியாளர்)

**இன்று நடைபெற்ற சந்திப்பு தற்போது ஏற்பட்டிருக்கின்ற நிலை மற்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப் படுத்துவது பற்றியே பேசப்பட்டது. இவையே இன்றைய பேச்சுக்களின் முதன்மையான விடயம். நாம் எமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியிருக்கிறோம். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**


நேற்றைய சந்திப்புத் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில் நோர்வேத் தூதுவரிடம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற செயற்பாடு பற்றியும் தெளிவு படுக்கியிருக்கிறோம் ஆகவே யுத்த நிறுத்த உடன்படிக்கையை உறுதியாக முன்னெடுக்க வேண்டும் ஆனால் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசுக்குத் தெரியப்படுத்தும் படி கூறியிருக்கிறோம் என்றார்.

***கருணாவிடயம் இப்போது பரபரப்பாக பேசப்படுகிறது. இது தொடர்பாக இன்றைய சந்திப்பின் போது அரசுக்கு என்ன விடயத்தை தெரிவித்திருக்கிறீர்கள்?**

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகரப் பொறுப்பாளர் சேனாதிராசா வீரச்சாவு

(மட்டக்களப்பு)



தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா நேற்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

கரும்புலிகள் தினமான யூலை 5ஆம் திகதி சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியான மட்டு-அரசடிச்சந்தியில் வைத்து காலை 9.00 மணியளவில் மோடடார் சைக்கிளில் வந்த தேசவிரோதிகளினால் சேனாதிராசா மற்றும் மட்டு- அம்பாறை மாவட்ட விளை

(12ஆம் பக்கம் பார்க்க)



## யுத்தநிறுத்த உடன்பாட்டைத் தொடர்வதற்கு நாம் கடுமையாக உழைக்கவேண்டும்

### -நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர்

(கொழும்பு)

“கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் வன்முறைகள் தொடர்பாகவும், கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாகவும் கிழக்கில் இடம்பெறும் படு கொலைகள் தொடர்பாகவும் என்னுடைய கவலையை நான் தெரிவித்தேன்.

எவ்வாறாயினும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கான தேவை குறித்து இருதரப்பினரும் வலியுறுத்தினர். எனவே மத்தியஸ்தர் என்ற ரீதியில் இதனைத் தொடர்ந்தும் கடைப்பிடிப் பதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.”

இவ்வாறு நேற்று கிளிநொச்சிக்கு வந்து தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்தபின் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; “கிழக்கு நிலவரம், கருணா விவகாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளோம். அத்துடன் போர் நிறுத்த உடன்படிக்கையின் தற்போதைய நிலை குறித்தும் கலந்துரையாடியுள்ளோம்” என்றும் நோர்வேத் தூதுவர் கூறியுள்ளார்.

## இலங்கை அரசு-விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை வெற்றி பெற மத்திய அரசு உதவ வேண்டும்

### - வை.கோ.வலியுறுத்து

இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிபெற இந்திய மத்திய அரசு தனது பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும் என ம.தி. மு.க பொதுச் செயலர் வை.கோ வலியுறுத்தினார்.

திருநெல்வேலி அருகே தாழையூத்தில் 2 நாட்கள் நடைபெற்ற ம.தி.மு.க. வின் 13 ஆவது மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் திங்கட கிழமை நிறைவுபெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து வை.கோ நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஈழத்தமிழர் பிரச்சினையில் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க இலங்கை சனாதிபதி சந்திரிகா திட்டமிட்டு செய்த சதியால் பேச்சுவார்த்தைக்குத் தடங்கல ஏற்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை சர்வதேச சமுதாயம் அங்கீகரித்துள்ளது. ஈழத்தமிழர்களின் துயர இருள் அமைதி வாழ்வுக்கான விடியல் உதயமாகிட ம.தி. மு.க தொடர்ந்து குரல் கொடுக்கும். உலகில் உள்ள வேறுசில நாடுகள், வல்லரசுகள் தங்களது எதிர்கால சுயநல நோக்கத்துக்காக இலங்கையில் கால்பதிக்க முற்படும் சூழ்

(11ஆம் பக்கம் பார்க்க)

## வெடிபொருட்களை வைத்திருந்த இளம்பெண் கைதாகி விடுதலை

வெடிபொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்ட இளம் பெண் ஒருவர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டு-குருமண் வெளியைச் சேர்ந்த குணம்-மிருதி (வயது-19) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார்.

தேச விரோதிகளின் தவாறான வழிநடத்தலால் இவரிடம் வழங்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் இரண்டு, கையடக்கத் தொலைபேசி ஒன்று மற்றும் கைத்துப்பாக்கிகள் ரவைகள் என்பன இவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை தமிழர் தேசியத்துக்கு எதிராகச் செயற்படும் தேசவிரோத சக்திகள் பொது மக்களைத் தவறான வழியில் பயன்படுத்த

(11ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்த பொலிசார் கோரிக்கை

பொலிசாரின் வாழ்க்கையை ஆபத்துக்குள்ளாக்காமல் உடனடியாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுற்படுத்துமாறு சிறிலங்காவின் பொலிஸ் பரிசோதகர் சங்கம் அரசைக் கேட்டுள்ளது.

சமாதானத்தின் போர்வையில் இரண்டாவது தடவையும் பயங்கரவாத நடவடிக்கையால் பொலிசாரின் உயிர் பறிக்கப்பட்டதாக எடுத்துக் கூறியுள்ள அச்சங்கம் மேற்படி சட்டத்தை அமுல் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியுள்ளது.

## கப்பல் விபத்து

அவுஸ்திரேலியாவில் இருந்து திருகோணமலை துறைமுகத்துக்கு வந்த கப்பல் ஒன்று விபத்துக்கு உள்ளாகியது.ஒலிம்பிக் கெலக்ஸி என்ற பெயரைக் கொண்ட இந்தக் கப்பல் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்தது.

கப்பல் நங்கூரம் இட முயற்சித்த போது அது தரை தட்டியுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## சிறில. பிரதம நீதியரச்ர் இன்று யாழ்.இற்கு வருகை

யாழ்.குடாநாட்டிற்கு இன்று வருகைதரவுள்ள சிறிலங்கா பிரதம நீதியரசர் சரத் என் சில்வா புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்றிற்கு முதலில் விஜயம் செய்யும் பிரதம நீதியரசர் பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்ளவுள்ளார். பின்னர் நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கான அடிக்கல்லினை காலை 10.30 மணிக்கு அவர் வைபவ ரீதியாக நாட்டி வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் பின்னர் யாழ். வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் விசேட கூட்டமொன்றில்

(11ஆம் பக்கம் பார்க்க)

## மணல் அகழ்தல் சம்பந்தமான அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் பின்வரும் இடங்களில் மணல் அகழ்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. பன்னங்கண்டி
2. கண்ணகைபுரம் பேராறு
3. குடமுருட்டி
4. கண்டாவளை
5. சுண்டிக்குளம் கல்லாறு

அனுமதிக்கப்பட்ட இடங்களை விடுத்தும், அனுமதியில்லாமலும் மணல் அகழ்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீறுபவர்களுக்கு ரூ. 5000.00 தண்டப்பணம் விதிக்கப்படும்.

கட்டண விபரம்

| உள்ளூர் | வெளியூர் | |
|---|---|---|
| 1சுமை உழவுஇயந்திரம் 50.00 | 1சுமை உழவுஇயந்திரம் | ரூ. 100.00 |
| | 1சுமை கனரர் | ரூ. 200.00 |
| | 1சுமை பாரவூர்தி | ரூ. 350.00 |

மேற்குறிப்பிட்ட கட்டணங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகம், முரசுமோட்டை, வட்டக்கச்சி நூலகம் ஆகிய இடங்களில் செலுத்தி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

வெளியூர் கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் பிரதேச செயலகங்களினால் வழங்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

எக்காரணம் கொண்டும் அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. இரவு நேரங்களில் மணல் அகழ்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

பொன்.நித்தியானந்தம்
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி-9755)

## நவமியில் நனையும் நினைவுகளோடு...



தாய் மடியில் 1973 □ 05 □ 17

தாயக மண்ணில் 1995 □ 07 □ 14

# கப்டன் அருந்ததி

(புலிப்பாய்ச்சல்)

**காஞ்சனா பாலச்சந்திரன்**

ஈழவிடுதலைக்காய் நீ விதைத்த
அர்ப்பணிப்பு - இன்று
அமைதியாய் அரும்புவிட்டு வளர்வதை
விண்ணில் நீயும் மின்மினியாய் - நின்று
விடியப்போகும் ஈழமதை முத்தமிடுவாய்.

முகவரி:-
இல:60 டி.10
உருத்திரபுரம்

(4642)

உன்பிரிவால்
குடும்பத்தினர்

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

ஆதிநாராயணபிள்ளை சிவச்சந்திரன் ஆகிய எனது அ.அட்டை (இல-813473631v) போ.க.பிரிவின் பயண அனுமதி சிட்டை அடங்கிய பேஸ் 11.07.2004 ஞாயிற்றுக் கிழமை புதுக்குடியிருப்பு-முகமாலை பேருந்துப் பணியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.(4806)

### கேம்பிறிஜ் கல்லூரி

உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. Work shop on English for communi cation நவீனமுறையில் ஆங்கில தொடர்பாடல் பட்டறை A/L பரீட்சைக்கு தோற்றியோர். தொழில்சார் நிறுவனங்களில் பணிபுரியும் இளைஞ், யுவதிகள் ஆகியோா. காலம் 14.07.2004 மாலை 5மணி. ஆசிரியர் கணேசன் நிர்வாகி. (4631)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (9895)

### கருத்தரங்கு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிச் செயலமர்வு 17.07.2004 (சனி-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை)அன்று கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள கேம்பிறிஜ்கல்லூரியில் நடைபெறும் கட்டணம் 150/= (4630)

### மீட்டல் வகுப்பு (2005 A/L)

உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறுகின்றது. (4634)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான...

மேரிஜேசுதாசனின் பொது அறிவுத் தகவல்கள் 2003, 2004ஆம் ஆண்டின் நடப்பு விடயங்களோடு கடந்தகால, மாதிரிவினாத்தாள்களையும் கொண்டது. யாழ், வன்னி அனைத்துப் புத்தகக்கடை களிலும் தற்போது கிடைக்கிறது. (4814)

## ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஏற்பட்டுள்ள ஆங்கில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமுகமாகப் பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்ப தாரிகள்,

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் புதிய பாடத்திட்டமாயின் A அல்லது B யும் பழைய பாடத்திட்டமாயின் னு அல்லது ஊ யும்,
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியும் பெற்றிருப்பதுடன்,

ஓர் எழுத்துப்பரீட்சைக்கும், நேர்முகத்தேர்விற்கும் தோற்றுமாறு வேண்டப்படுவார். சுயமாகத் தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்கள் யாவும் 20.07.2004 புதன்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

த.குருகுலராசா,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

(சி-9143)

# சாவு அறிவித்தல்



## கந்தசாமி -இரவீந்திரன்

இல.101, 10ஆம் பண்ணை கனகபுரம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரவீந்திரன் (சதீஸ்) 13.07.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.அன்னார் கந்தசாமி (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) மகாலட்சுமி (வவா) ஆகியோரின் அன்பு மகனும், ராஜினி,சஞ்சீவன் (புனித பற்றிமா பாடசாலை மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 14.07.2004 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:- தந்தை
சு.கந்தசாமி(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

(10019)

# வேலை வெற்றிடம்

**ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத்திட்டம் நெடுங்கேணி.**

**பதவி:–** திட்ட முகாமையாளர்

நெடுங்கேணிப்பிரதேசத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த உணவுப்பாதுகாப்புத் திட்டத்தில் திட்டமுகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

**கல்வித் தகைமை:–** முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**அனுபவம்:–** ஆகக்குறைந்தது 3வருடமாவது முகாமைத்துவ அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**தொடர்பாடல்:–** ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாக உரையாடக் கூடியவராகவும் மொழிபெயர்க்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**கணினியில்:–** Ms Word, Excel உபயோகிக்கத்தெரிந்தவராக இருத்தல்வேண்டும்.

**சம்பளம்:–** 17,000 (கலந்தாலோசிக்கப்படும்) போக்குவரத்திற்காக வாகனம் வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் நெடுங்கேணியில் தங்கியிருந்து வேலைசெய்தல் மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:–** 25.07.2004 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:–**
ஒருங்கிணைந்த உணவுப்பாதுகாப்புத்திட்டம்,
இல.51,வைரவர்கோவில் வீதி,
வைரவர்புளியங்குளம்,
வவுனியா.
0242221354-2224322.

(சி9754)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ இல:- 102/04
தன்மை:- மணநீக்கம்

வழக்காளி:- ஆழ்வாப்பிள்ளை ஆனந்தகுமார்
21/டி8, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

எதிராளி:- திருமதி ஆனந்தகுமார் ஜெயகௌரி
C/O: ப.இராமச்சந்திரன்
யூனியன்குளம்,
கோணாவில்.

# பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கின் வழக்காளியால் எதிராளியாகிய உமக்கு எதிராக மணநீக்கம் பெறுவதற்கு ஓர் வழக்கை தாக்கல் செய்து அவ்வழக்கில் உமக்கான அழைப்புக் கட்டளையை சேர்ப்பிக்க வழக்காளி முயற்சி செய்து, அது கைக்கூடாததால், இப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட பகிரங்க அறிவித்தல் மூலம் தங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இதில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இப்பிரசுரம் கிடைத்து 21 நாட்களுக்குள் இம் மன்றில் நீரோ அல்லது உம்மில் உரித்துடையோரோ தோன்றி இதற்கான ஆட்சேபனையை மேற்கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் குறித்த வழக்கை ஒரு முக விசாரணை மூலம் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு:- சி.க.அமல்நிக்சன்,
சட்டத்தரணி,
மாவட்ட மேல்,மேன் முறையீட்டுமன்று
கிளிநொச்சி.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(4817)

# ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸ் துருப்புக்களை ஆகஸ்ட் 20இற்குமுன் வாபஸ் பெற யோசனை

(மணிலா)

**ஈராக்கிலுள்ள பிலிப்பைன்ஸ் துருப்புக்கள் திருப்பியழைக்கப்படுவார்கள் என்று அல்-அஜிரா தொலைக்காட்சி மூலம் பிலிப்பைன்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.இதனையடுத்து பிலிப்பைன்ஸின் அமைச்சரவை அவசர அவசரமாக நேற்றுக் கூடியுள்ளது.**

தீவிர வாதிகள் பிலிப்பைன்ஸ் நாட்டவரான கனகரக சாரதியான ஏஞ்சலூர் டிலாக்கூயலி என்பவரை பணயக் கைதியாகப் பிடித்து வைத்துள்ளனர்.

ஈராக்கிலுள்ள பிலிப்பைன்ஸ் படைகள் உடனடியாக விலக வேண்டும். அல்லது பிலிப்பைன்ஸ் வாசி சிரைச் சேதம் செய்யப்படுவார் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதியே துருப்புக்களை வாபஸ் பெறப்போவதாக பிலிப்பைன்ஸ் சனாதிபதி புளோரியோ அரோயோ முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால் திட்டமிட்டதற்கு முன்னதாகவே துருப்புக்களை அழைக்க வேண்டுமா? என்று கேள்வியெழுந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.


ஈராக்கிய கிளர்ச்சியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுதலை செய்யும் நோக்கத்திலேயே கூடிய விரைவில் துருப்புக்களை வாபஸ் பெறப்போவதாக பிலிப்பைன்ஸ் துணை வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். இருந்தபோதிலும் இதற்கான உத்தரவு இன்னமும் கிடைக்கவில்லையென்று பிலிப்பைன்ஸ் இராணுவம் அறிவித்துள்ளது.

## காங்கிரஸில் இணைவு

அருணாசலப் பிரதேசத்தில் கெகாங் அபாங் தலைமையிலான ஐ.ஜ. முன்னணி அரசில் இடம் பெற்றிருந்த முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 13 பேர் திங்கட்கிழமை காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தாக அக்கட்சியின் சட்டப் பேரவைத் தலைவர் டகோஜபி தெரிவித்தார்.



இஸ்ரேல் டெல் அவிவ் நகரில் ஒரு பெண் பலியாகவும் 14 பேர் காயமடையவும் காரணமான குண்டுவெடிப்பு தொடர்பாக சான்றுகளை ஆராயும் பொலிசார்.



பாக்தாத்துக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக ஆராயக் கூடிய மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் ஈராக்கிய சனாதிபதி கஸி அல்யாவர் தேசிய பாதுகாப்பு கொமாண்டர் மௌலா அல் றச்சிடாவை வரவேற்கிறார்.

# ஏரியல் ஷரோனின் அரசில் இணைய தொழிற்கட்சித் தலைவர் சிமொன்பரஸ் நிபந்தனை

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் கூட்டணி அரசாங்கத்தை அமைப்பதற்காக தொழிற் கட்சித் தலைவர் சிமோன் பரஸ், லிகுட்கட்சித் தலைமையிலான பிரதமர் ஏரியல் ஷரானின் அரசாங்கத்தில் இணைவதற்கான நிபந்தனைகளை வெளியிட்டுள்ளார்.

இரண்டு கட்சிகளின் தலைவர்களும் ஐக்கிய அமைச்சுக்களை அமைப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் கலந்துரையாடியுள்ளனர்.

காஸா மேட்டு நிலப்பகுதியிலிருந்து வாபஸ் பெறும் திட்டம் தொடர்பாக பிரதமர் ஏரியல் ஷரோன் தனது சொந்தக் கட்சியான லிகுட் கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பிற்கு முகம் கொடுத்துள்ள நிலையிலேயே இந்த சந்திப்புக்கள் நடந்துள்ளது.

இந்தசந்திப்பினையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய தொழிற்கட்சித் தலைவர்.

முன்கூட்டியே வாபஸ் பெறுவதற்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்க வேண்டும் என்பதே தமது கட்சியின் முக்கிய நிபந்தனை என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பாக ஆராய்ந்த பிரதமர் ஏரியல் ஷரோன் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

120 அங்கத்தவர்களைக் கொண்ட இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் இரு கட்சிகளும் தலா 55 ஆசனங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிசாரின் தடியடியில் அயர்லாந்தில் பலர் காயம்

(லண்டன்)

இங்கிலாந்தின் வட அயர்லாந்துப் பகுதியில் புரடொஸ்தான் பிரிவினர் நடத்திய ஊர்வலத்தில் பெரும் மோதல் ஏற்பட்டதில் பொலிசார் தடியடி நடத்தியதில் பலர் காயமடைந்துள்ளனர்.

அயர்லாந்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த போரில் ரோமன் கத்தோலிக்கப் பிரிவினரை புரடொஸ்தான் பிரிவினர் தோற்கடித்தனர். இதன் நினைவாக ஆண்டுதோறும் இந்த வெற்றியை புரடொஸ்தான் பிரிவினர் கொண்டாடி வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக ரோமன் கத்தோலிக்கப் பிரிவினர் இந்த ஊர்வலத்தை நடத்த விடாது ஆர்ப்பாட்டம் கல்லடி நடத்தி வருகின்றனர்.

இம்முறையும் அதனை நடத்த விடாது குழப்பம் விளைவித்தமையினால் பொலிசார் தடியடி நடத்தி அவர்களை கலைத்தனர்.

## டிக்சிற்-ஆர்மிரேஜ் இன்று சந்திப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிக்சிற் ஆர்மிரேஜ் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்சிற் வெளியுறவுச் செயலர் ஷாக் உடனும் இன்று பேச்சுவார்த்தையினை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்திப்பை முடித்துக் கொண்டு ஆர்மிரேஜ் இஸ்லாமாபாத் புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் மன்மோகன் சிங்கையும் வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசுவார்.





இந்தோனேசியாவில் நடைபெற்ற தேர்தலில் வாக்குகளை எண்ணுவதில் தவறு ஏற்பட்டதாகவும் மீள எண்ண வேண்டும் எனக் கோரியும் யகார்த்தாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள்.

# றீகனின் மகன் புஷ்ஷிற்கெதிராக தேர்தல் பிரச்சாரத்தில் குதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி றொனால்ட் றீகனின் புதல்வர் சனநாயகக் கட்சியின் சார்பில் சனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்ற ஜோன்ஸ் ஹெரிக்கு ஆதரவாக தேர்தல் மேடையில் உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



தொழில் நுட்பக் கோளாறினால் திட்டமிட்ட படி விண்ணுக்கு செலுத்தமுடியாது போன 'அவ்ரா' செயற்கை கோள் போயிங்டெல்டா–II றொக்கட்டில் ஏற்றப்படுகிறது.

அடிப்படைக் கலங்கள் தொடர்பான ஆராய்ச்சி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்த மனுக்கும் தற்போதைய சனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ்ஷின் செயற்பாடுகளுக்கு எதிராகவே அவர் பேசுவார் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

(அடிப்படைக்கல ஆராய்ச்சி) அல் சமீர் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கு வழிவகுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

றொனால்ட் றீகனும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் ஆவார் அவரது மனைவி இந்த ஆராய்ச்சியினை மட்டுப்படுத்தும் புஷ்ஷின் தீர்மானத்திற்கெதிராக கடுமையான முறையில் குரல் எழுப்பியமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஸ்பெய்ன் சன் பெமர் என்னுமிடத்தில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டு நிகழ்வின் போது உதவியாளர் ஒருவர் காளையொன்றினால் தாக்கப்படுகிறார்.

## மக்கள் ஒத்துழைப்பு தராமையால் வீதிகள் புனரமைப்பதில் தாமதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு 1ஆம் குறுக்குத்தெரு, 2ஆம் குறுக்குத்தெரு வீதிகள் புனரமைப்பதற்கான நிதி வந்துள்ள போதும் மக்கள் வீதியையும் சேர்த்து வேலி அடைத்துள்ளதால் வீதி புனரமைக்க முடியாதுள்ளதாக பிரதேச சபைச் செயலரும் விசேடஅணையாளருமான கிருஷ்ண பிள்ளை தெரிவித்தார்.

இவ்வீதிகள் திருத்துவதற்காக கிரவல்கள் பறிக்கப்பட்டு வருகின்றபோது மக்கள் வேலிகளை உள் நோக்கி அகற்றாததினால் புனரமைக்க முடியாதநிலைகாணப்படுவதாகவும் மக்களிடம் பல முறை கூறியும் அவர்கள் வேலிகளை அகற்றாததுடன், அடையாளக் கட்டைகளையும் பிடுங்கி எடுத்துள்ளனர். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (20)

## டிப்ளோமா மீட்டல் வகுப்பு

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தில் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான வினாவிடை மீட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 17,18 ஆம் நாட்களில் (சனி, ஞாயிறு) நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் அவர்கள் அறியத்தருகின்றார்.

பகுதி II இல் பயிலும் சகல ஆசிரிய மாணவர்களையும் தவறாது வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர். (08)

## வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் போக்குவரத்து நடைமுறைகளில் கட்டுப்பாடு

### காவல்துறையின் வீ.போ.பிரிவு அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளில் சில கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தமிழீழ காவல் துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களை குறைப்பதன் ஒரு நடவடிக்கையாகவும் அதேவேளை வீதிவிபத்துக்களின்போது ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றளவு தவிர்க்கும் நோக்குடனும் ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேல் பயணிப்பது, ஒரு துவிச்சக்கரவண்டியில் இருவருக்குமேல் பயணிப்பது, வீதியில் பக்கம் பக்கமாகப் பயணித்து வீதிப் போக்குவரத்து நடைமுறைகளுக்கு இடையூறு விளைவிப்பது என வீதி ஒழுங்கு நடைமுறைகளை மதிக்காது செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதனையே முழுமையான நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

எனவே தமிழீழ காவல்துறையினரின் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளுக்கமைவாக அனைவரும் செயற்பட்டு வீதி விபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இதற்கான தகுந்த சட்டநடவடிக்கைகள்நேற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

# முல்லை. மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் வைத்தியர் பற்றாக்குறையைப் போக்க முன்வருக!

## திடீர் ஆய்வு

முல்லை. நகர்ப்பகுதியில் அமைந்துள்ள உணவு விடுதிகளில் திடீர் ஆய்வில் தமிழீழ சுகாதார சேவையினர் ஈடுபட்டுவருகின்றனர்.இந்த ஆய்வுச் செயற்பாட்டின் போது பழுதடைந்த பல உணவு வகைகள் சுகாதார சேவையினரால் அழிக்கப்பட்டுவருகின்றன. (19)

### பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழைப்பு

(புதுக்குடியிருப்பு)

**முல்லை.மாவட்டத்தில் வைத்தியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவும் தொடர்கதையாகவும் சென்று கொண்டு போவதாக முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.**

இதில் மிகவும் மோசமாக முல்லை.மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையுள்ளது. இந்நிலையை கருத்திற் கொண்டு முல்லை.மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதி காரி இதுவரை காலமும் முழங்கா வில் வைத்தியசாலையையும் பார்வையிட்டு வந்தார். அதனை நிறுத்தி முழுமையாக முல்லை. மாவட்ட வைத்திசாலையில் சேவையாற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது மாவட்டத்தில் உள்ள சகல வெற்றிடங்கள் பற்றிய விபரத்தை எமது மேலதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன். இருந்தும் இன்றுவரையும் மாற்றங்கள் ஏற்படவில்லை இதனால் சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

நோயாளர்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளதை என்னால் அவதானிக்க முடிகின்றது எனக் குறிப்பிட்ட அவர், எமது மாவட்டத்திலிருந்து எவ்வளவோ வைத்தியர்கள் பிறமாவட்டங்களில் வேலை செய்கின்றனர். அவர்கள் பெருமனது கொண்டு தமது மக்களின் அவலத்தை கருத்திற் கொண்டு குறுகிய கால அடிப்படையில் சேவையாற்ற முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (08)

## மறைக் கோட்டங்கள் இடையிலான கலை, விளையாட்டுப் போட்டிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நான்கு கத்தோலிக்க மறைக்கோட்டங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியும், கலைப் போட்டிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆரம்பமானது.

மங்கல விளக்கினை இளைஞர் ஒன்றியத்தலைவரான அருட்தந்தை அகஸ்ரீன் ஏற்றிவைக்க, தொடர்ந்து 4 மறைக் கோட்ட இளைஞர் ஒன்றியத்தலைவர்களும் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார்.

மறைக்கோட்ட இளைஞர் ஒன்றியக் கொடியினை அருட்தந்தை அகஸ்ரீன் ஏற்றினார். முல்லை. வலய இளைஞர் கொடியினை முல்லை. வலய இளைஞர் ஒன்றியத்தலைவர் ஏற்றினார்.

இளைஞர்களுக்கான உதைபந்தாட்ட சிநேகபூர்வமான போட்டியும், யுவதிகளுக்கான தாச்சிப் போட்டியும் இடம் பெற்றன.

கிளித்தட்டுப் போட்டியில் அளம்பில் பங்கு வெற்றி பெற்றது. தொடர்ந்து இன்றைய காலகட்டத்தில் சினிமாவினால் இளைஞர் யுவதிகள் எவ்வாறு சீரழிகின்றார்கள் என்ற தலைப்பிலான நாடகப் போட்டி இடம் பெற்றது.

இதில் முதலாம் இடத்தினை அளம்பில் பங்கின் "சினிமாவின் சீரழிவு" என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது. இரண்டாம் இடத்தை புதுக்குடியிருப்பு பங்கின் திருச்சபை என்ற நாடகமும் பெற்றது.

பெண்கள் குழுப்பாடல் போட்டியில் முல்லைத்தீவு பங்கு முதலிடத்தைப் பெற்றது. வினாடி வினாப் போட்டியில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்புப் பங்கும், இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு பங்கும் பெற்றன. இதில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது (20)

### -முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலை-

## கட்டடவேலைகள் இழுத்தடிப்பு மாணவர்கள் மரநிழலில் கற்கை

(முள்ளியவளை)

முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை இடமாற்ற, கட்டட வேலைகள் இழுத்தடிப்பு நிலையில் உள்ளது.

மேற்படி பாடசாலை,கட்டட வசதியின்றி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

இப்பாடசாலை இடம்மாற்றம் செய்யப்பட்டு அவ்விடத்தில் நிக்கொட் நிதியுதவியுடன் புதிய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தகாரர்களின் இழுத்தடிப்பால் பல மாதமாக வேலைகள் முடிவடையாதுள்ளது.

கடந்த 30.06.2004 இல் வேலைகளைப் பூர்த்தியாக்கி கட்டடத்தினை கையளிப்பதாக ஒப்பந்தகாரர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் உறுதியளித்துள்ள அதேவேளை அன்று தொடக்கம் இன்று வரையும் எதுவித வேலைகளும் மேற்கொள்ளப்படாது இழுபறி நிலையில் உள்ளதாக கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை தெரிவிக்கின்றார்.

மேற்படி பாடசாலை வேலைகள் முடிவடையாததால் மாணவர்கள் மரநிழல்களின் கீழ் இருந்து கற்பதையும் ஆசிரியர்கள் கற்பிப்பதையும் மனவேதனையுடன் அவதானிக்க முடிகின்றது. சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் உடனடியாக வேலைகளைப் பூர்த்தியாக்கி மாணவர்களின் அவலத்தைத்தீர்க்க முன்வரவேண்டுமென பலரும் எதிர்பார்க்கின்றனர். (ஆ)

## விழிப்பூட்டும் கருத்தரங்கு

சிலாவத்தை தியோகுநகர் மக்களுக்கு முல்லைத்தீவு காவல் துறையினர் விழிப்பூட்டும் கருத்தரங்கொன்றை கடந்த சனிக்கிழமை பிற்பகல் கிராமத் தலைவர் தலைமையில் நடாத்தினர்.இதில் மக்கள் இக்காலகட்டத்தில் எவ்வாறு செயற்படவேண்டுமென்றும் குற்றங்களின் வகை அதற்கான தண்டனைகள் எவ்வாறு இருக்கின்றது என்பது தொடர்பாகவும், மக்கள் எந்தச் செயலிலும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்பது தொடர்பாகவும் முல்லை. காவல் பணிமனைப் பொறுப்பாளர் குணேஸ்வரன் கருத்துரை வழங்கினார். (20)



கிளிநொச்சி மாவட்டத்தில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக சமய, சமூகப் பணியாற்றிவரும் திருநெறிக்கழகம் தமதுவருடாந்த பொதுக்கூட்டத்தை அண்மையில் நடாத்தியது. அக்கூட்டத்துக்கு வருகை புரிந்த கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் ஆகியோரை வரவேற்று கழகத் தலைவர் வே. மகாலிங்கம் உரையாற்றுகின்றார். (சோ)

## அம்பாறையின் பின்தங்கிய கிராமங்களில் பெண்களுக்கான தையல் பயிற்சிநெறி

(மட்டக்களப்பு)

பாடசாலைக் கல்வியைமுடித்துவிட்டு தொழில் முயற்சியின்றி இருக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய வறிய கிராமங்களில் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பெற்று வருவதால் கஷ்ரப்பட்ட பெண்கள் மிகுந்த பயனடைந்துள்ளார்கள்.

நாவிதன்வெளி 15ஆம் கிராமத்தில் 30 பெண்களும், சொறிக்கல் முனையில் 25 பெண்களும் தையல்பயிற்சிகளை பெற்றுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்பெறவுள்ளனர்

02ஆம் கட்ட தையல் பயிற்சி நெறியில் 40 பெண்கள் பயின்று வருகின்றார்கள். 05 தையல் இயந்திரங்களுடன் மட்டும் இப் பயிற்சி நெறி நடாத்தப்பெறுவதால் கூடிய தொகையினர் பயிற்சிக்காக விண்ணப்பித்துள்ள போதிலும் அவர்களை இணைத்துக் கொள்வது கஷ்டமாக இருப்பதாகவும், மேலும் தையல் இயந்திரங்களைப் பெற்று இத்திட்டத்தைவிரிவுபடுத்தி, பாதிக்கப்பட்ட கிராமப் பெண்கள் வாழ்வை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் தெரிவித்தார். (சோ)



# தென்மராட்சியில் காய்ச்சல், வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(தென்மராட்சி)

**தென்மராட்சிப் பகுதிகளில் இதுவரை இல்லாத அளவுக்குக் காய்ச்சல், வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

சமீப நாட்களாக இதனால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த சாவகச்சேரி வைத்தியசாலையின் தலைமை மருத்துவர் அம்பிகைபாகன், அழுகிய பழவகைகள், பழுதடைந்த உணவுப் பண்டங்கள் உட்கொள்ளாமலும், குடிநீரைச் சுட வைத்து அனைவரும் பருக வேண்டும் எனவும், வீடுகளுக்கு அருகில் கழிவு நீர் தேங்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும தெரிவித்தார். நோயின் அறி குறி தெரிந்தவுடன் உடனே மருத்துவமனையை நாடிச் சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# நகரை சுத்தமாக வைத்திருக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம் - சாவகச்சேரி பிரதேசசபை தலைவர்

(தென்மராட்சி)

கொடிகாமம் நகர் பகுதியையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு பொதுமக்கள், வர்த்தகர்கள், வியாபாரிகளின் பங்களிப்பு அவசியம் எனச் சாவகச்சேரி பிரதேச சபைச செயலாளர் திரு. பாலச்சந்திரன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

சந்தைப்பகுதிகளில் கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைத் கொட்டி வருவதாலும் மீன்சந்தைத் தொகுதிக்கு அண்மையிலேயே, மீன் கழிவுகளை வெட்டிப் புதைப்பதாலும், நகரின் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. இதற்கு மாற்று ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்றும், பொதுமக்களும், வர்த்தகர்களும், வியாபாரிகளும் இப்பகுதியைத் தூய்மையாக வைத்துக கொள்வதற்கு தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். சமீப காலமாக இச்சந்தைப் பகுதிகளில் இருந்து, மீன் கழிவுகளால் பெரும் துர்நாற்றம் வீசி வந்தமை குறிப்பிடத்தக்கது. (28)

# கொடிகாமம் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கொடிகாமம் பொதுச்சுகாதார பிரிவுக்குட்ப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்குத் தேவையான ஆளணிகள் வாகனங்கள் தயார்ப்படுத்தப்பட்டு இப்பகுதிகளிலுள்ள கட்டாக்காலி நாய்கள் உரிமைத்தகடு இல்லாத வளர்ப்பு நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகளை இப்பகுதிக்கான சுகாதாரத்துறை ஊழியர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இப்பணி, இரண்டு வாரங்கள் இடம்பெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த கொடிகாமப்பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ந.நிர்மலானந்தன் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் விடத்தற்பளைப் பகுதியில் விசர் நாய்க் கடிக்கு இலக்காகி கந்தையா ஏகாம்பரம்-(வயது44) என்ற குடும்பஸ்தர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார். சிறிலங்காப் படைமுகாங்களில் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் இருப்பதாக இவற்றைப்பிடித்து அழிப்பதில் சிக்கல்கள் இருப்பதாகவும், பிடிக்கச் செல்கின்ற பொழுது பெருந்தொகையான நாய்கள் படைமுகாம்களில் தஞ்சம் அடைவதால்,இவை தொடர்ந்து தப்பி இருந்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. (28)

# சிறிலங்கா கடற்படைக்கு ம.உ. குறித்த கருத்தரங்கு

சிறிலங்கா கடற்படையினரிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் வகையிலான கருத்தரங்குகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடாத்தவுள்ளது.

முப்படைகளைச் சேர்ந்த சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட அதிகாரிக்களுக்கிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் வகையிலான கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே எதிர் வரும் நாட்களில் காங்கேசன் துறையிலுள்ள வடபிராந்திய கடற்படைக் கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படைஅதிகாரிகளுக்கு இக்கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

இதனிடையே அண்மையில் இராணுவத்தின் யாழ். மாவட்டத்திலுள்ள படைப் பிரிவிற்கும், பொலிசாரிற்கும் இவ்வாறான கருத்தரங்குகள் நடாத்தப்பட்டிந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கருத்தரங்கு நடத்த செ.சங்கம் ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் விழிப்புணர்வு சம்பந்தமாக கருத்தரங்குகள் நடந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வைத்திய கலாநிதி திரு.தியாகராசா தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் எதிர்வரும் 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

முதலுதவிச் சிகிச்சை, அளித்தல் போக்கு வரத்துப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு சம்பந்தமான கருத்தரங்குகளை, மாணவர்களிடையே கொண்டு செல்வதே இத்திட்டத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சென்.ஜோன்ஸ் அம்பியுலன்ஸின் முதலுதவிப் பயிற்சிநெறி ஆரம்பம்

சென்ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் மக்கள் நலன் கருதி புளியங்குளம் சோதனைச் சாவடியில் பணியாற்றும் ஆயப்பகுதியின் பணியாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சி நெறி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இப்பயிற்சி நெறியில் முதல் கட்டமாக 25 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

புளியங்குளம் சோதனைச் சாவடியில் இயங்கும் யாழ்.பயணிகளுக்கான நிலையம், வன்னிப் பயணிகளுக்கான நிலையம், சுமையூந்துகளுக்கான சோதனை நிலையம் ஆகியவற்றிலிருந்து இப்பயிற்சி நெறியில் பலர் கலந்து கொண்டுள்ளனர். பயிற்சியின் நிறைவில் சோதனைச் சாவடியில் நான்கு இடங்களில் முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் வழங்கும் ஒழுங்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றுவோருக்குச் சென்.ஜோன்ஸ் அமபியுலன்ஸ் படைப்பிரிவினரால் முதலுதவிப் பற்றியு கை நூல்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவல்லாத பொருட்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

ஆசியாவிற்கான ஜப்பானிய உறவுப்பாலம் பாஜ் நிறுவனம் யு.என்.எச்.சி.ஆர் நிதி உதவியுடன் இன்றும் நாளையும் புதுக்குடியிருப்பு, ஒட்டு சுட்டான் பிரதேசங்களில் மீளக் குடியமர்ந்துள்ள 237 குடும்பங்க ளிற்கு உணவல்லாத பொருட்களை வழங்கவுள்ளது.

இன்று ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மன்னாரில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்துள்ள 37 குடும்பங்களிற்கும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 200 குடும்பங்களிற்கும் இவ் உணவல்லாத பொருட்கள் வழங்கப்படவுள்ளது. (15)

# தென்மராட்சியில் வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

உலகஉணவு வேலைத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேசசபை அதன் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள மணல் வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக அனைத்துப் பகுதிகளுக்குமான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன இதுகுறித்துத் தென்மராட்சிப் பகுதியில் உள்ள உள்ளூர் சமூக அமைப்பின் பிரதேசங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் கொடிகாமம் பிரதேசசபை அலுவலகத்தில் பிரதேசசபைத் தலைவர் திரு.பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெற்றது, இந்தக் கூட்டத்தில துரித கதியில் மணல் ஒழுங்கைகள், வீதிகளைப் புனரமைப்பதென முடிவெடுக்கப்பட்டது. (28)

# சமாதானம் குறித்து அரசின் பொறுப்பற்ற போக்கை கண்டிக்கிறது யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீரழிக்கும் நோக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என யாழ். பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. எமது மக்களுக்கொரு நீதியான தீர்வைக் கொடுக்க முன்வராமல் போர் நிறுத்தம் என்ற போர்வையில் தமிழினத்தின் விடுதலையை இழுத்தடித்துக் கொண்டு போகும் இந் நிலைமையை மக்களாகிய நாம் இனிமேலும் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. போரினைத் தொடங்குவதற்காக இராணுவத்தைப் பலப்படுதததும் நடவடிக்கைகளையே சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கின்றது. அத்தகைய நிலையில் தான் 12.07.2004 அன்று முகமாலை முன்னரங்க காவல் அரங்க நிலை யினை பிரதிப் பாதுகாப்பு அமைச் சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினருக்கும் பயிற்சி அளிப்பதில் அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர் ஈடுபட்டுள்ளனர். இது எதனை வெளிப்படுத்துகிறது? சமாதானம், சமாதானம் என்று அரசு கூறிக்கொண்டு எமது தாயகப் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகளைப் பலப்படுத்து வதன் அர்த்தமென்ன தீர்வினை எதிர்பார்த்து நிக்கும் தமிழ்மக்கள் சமாதானம் தொடர்பான நம்பிக்கையினைத் தளர்வடையச் செய்யும் நடவடிக்கையாகவே நாம் இதனைக் கருதுகின்றோம்.

எமது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்கு முறைக்குள்ளாக்குவதும் தமது உரிமைகளைக் கொடுக்க மறுப்பதும் காலத்திற்குக் காலம் மாறிமாறி வரும் சிங்கள ஆட்சியாளர்களின் கொள்கையாகத் தான் இருந்து வருகின்றது. இந்தக் கொள்கையையே எல்லா ஆட்சியாளர்களும் பின்பற்றி வருகிறார்கள் என்பதுதான் வெளிப்படையா னது எமது மண்ணில் நாம் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம். திட்டமிடப்பட்டு சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் இனியும் எம்மண்ணில் வேண்டாம். எமது மக்களுக்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க இந்த அரசாங்கம் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை நிலைகுலைய வைத்து போரின் மீதான ஆயத்தங்களினை மேற்கொள்வதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ([illegible])

# சாவகச்சேரியில் இடம் பெற்ற இரு விபத்துக்களில் மூவர் படுகாயம்

சாவகச்சேரியில் இரு இடங்களில் நேற்று முன்தினம் நிகழ்ந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் மூவர் படுகாயமுற்றனர். மட்டுவில் சாவகச்சேரிசாலையில் இடம் பெற்றவிபத்தில் ஜோன்சன் வயது 15, சுஜிபன் வயது 19 என்பவர்களும், சாவகச்சேரியில் இடம் பெற்ற விபத்தில் நகுல நந்திஸ் வயது 30 என்பவரும் சம்பவ இடத்தில் படுகாயமுற்று சாவகச்சேரி, வைத்தியசாலையில அனுமதிக்கப் பட்டுள்ளனர். (28)

# அடிப்படை வசதிகள் கோரி நிற்கும் மன்/சாந்திபுரம் அ.த.க. பாடசாலை

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றிக் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பாடசாலையில் இருநூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அத்துடன் அதிபரும; ஆசிரியர் ஒருவருமே மாணவர்களுக்கான கற்பித்தலை மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர்.

தரம் 06 வரையுள்ள இப்பாடசாலையில் மாணவர்கள் தமது அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாததால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனையடுத்துப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பல தடவைகள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கல்வித் திணைக்களத்துடனும் தொடர்பு கொண்ட போதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இப்பாடசாலை மாணவர்களின் குடும்பங்கள் மிக மிக வறுமைக்கோட்டிற்குட்பட் டவை என்பதும் குறிப்பித்தக்கது. (மி)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசகர்களே...!

மிக... மிக... மென்மையாய் எனது எழுத்துகளைச் சுவைக்கிறீர்கள். ஒரு காந்தியைப் போல ... ஒரு யேசுவைப்போல்... ஒரு புத்தனைப் போல... ஒரு சோக்கிரட்டீசைப் போல வாழ்வு அமைந்து விடுவதில்லை.

வாழ்க்கையில் மறுபக்கங்களுண்டு ; கடினமான பாதைகள் உண்டு ; வக்கிரங்கள் உண்டு. வாழ்ந்துதான் ஆகவேண்டும்.

வன்னியில் கடந்த கரும்புலிகள் தினத்தில் நின்றிருந்தேன்...! எப்படி...எப்படி இன்னுயிர் ஈந்தனர்...?

வாய் பொத்தி...

சிரம் தாழ்த்தி...

என் தொப்பி கழற்றி...

அவர்களை மதித்தல் தவிர எனக்கென்று எந்தத் தத்துவமும் இல்லாது போயிற்று!

* * * *

ஒரு நாள் -

வடதுருவத்தில் பனி பெய்து கொண்டிருந்தது. பனி பெய்வதென்றால் ... ரொம்ப அழகாயிருக்கும்.

நந்தியாவட்டைப் பூக்கள் ...

நித்திய கல்யாணிப் பூக்கள்...

திடீரென உங்கள் முகத்தில் வந்து முட்டினால் உங்களுக்கு எப்படியிருக்கும்... அதே போலத்தான் பனித்துளிகள் முகத்தில் விழும். முதற்தரம் ஆனந்தமாயிருக்கும். பின்னர் சொண்டுகள் 'ரைப்' அடிக்கத் தொடங்கும். விரல் நுனிகள் விறைத்துப் போகும். மூச்சுக்கள் கூட கனமாகி... உறைந்து போகும்.

இப்படியான ஒரு 'Winter' கால நிலையில் நான் அவனைச் சந்தித்தேன். அவன் நீளமாகத் தலை வளர்த்திருந்தான். வெள்ளைத் தலைமயிர் இலகுவாய் ... தானே காற்றில் அசைந்தாடும். சில வேளைகளில் அதுவும் பனியில் உறைந்து போகும். அவனுக்கு நீலக் கண்கள். அப்பொழுது வரை நான் நீலக் க்ண்களைப் பார்த்ததேயில்லை. சின்ன வயசில் எனது அக்காவுக்கு அவளது சித்தப்பன் ஒரு பாவைப்பிள்ளை வாங்கிக் கொடுத்திருந்தார். அப்பொழுதுதான் நான் முதன் முதலில் நீலக்கண்களைப் பார்த்தேன். அது கூட'Plastic' செயற்கைக் கண்கள். எனது அக்கா... அந்தக் கண்களைக் கூடப் பிடுங்குவாள். அதைக் கழுவிவிட்டு மீண்டும் பொருத்துவாள் அந்தப் பொம்மை மீது!. ஒவ்வொரு தடவை அவள் பிடுங்கும் போதும் எனக்குப் 'பகீர்' ,'பகீர்' என்றாகும். அத்தகைய ஒரு அழகிய நீலக்கண்கள் போல இவனும் இருந்தான்.

ஏனோ... எனக்கு அவனில் பிடித்துப் போயிற்று. அவனுக்கு நான் கொஞ்சப் பணம் கொடுத்தேன். நன்றியுணர்வுடன் பெற்றுக் கொண்டான். அருகிலிருந்த 'Bench' இல் இருவரும் அமர்ந்து கொண்டோம்.

நான் என்னைப் பற்றி அவனுக்குச் சொன்னேன்.

" நான் ஓர் அகதி...!

எமது நாட்டில் யுத்தம் நடக்கிறது.

பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அழிக்க நினைக்கிறது. இந்த இனச் சுத்திகரிப்பில் ஒரு பலிக்கடாதான் நான்" என்றேன்.

எனது கதையைக் கேட்டுவிட்டு அவன் சொன்னான்.

"நான் ஒரு யூதன்


நான் கிழக்கு ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தேன். எனது நாட்டிலும் கொடிய யுத்தம் நடந்தது. எனது நாட்டில்... ீனப் பெருஞ்சுவர்போல நீண்ட மதிலை ஒரு வாரகாலத்திற்குள் எழுப்பி உறவினர்களையும் நண்பர்களையும் பிரித்து வைத்திருக்கிறார்கள் உன்னைப் போலவே......

நானும் ஓர் அகதிதான்" என்றான்.

எமக்கிடையே நெருக்கம் உண்டானது. நிறைய விடயங்களைப் பரிமாறிக் கொண்டோம். அவன் என்னைத் தன் நாட்டுக்கு வரும்படி அழைத்தான். அவனுடன் சேர்ந்து ஜேர்மனி முழுவதும் சுற்றித் திரிந்தேன். ஏகப்பட்ட அனுபவங்கள். அப்பொழுது "BERLIN"சுவர் உடைக்கப்பட்டிருக்கவில்லை.கிழக்கு ஜேர்மனியின் அழகை அங்கேயே பிறந்து வளர்ந்த ஒருவனுடன் இரசித்துப் பார்த்தேன். புகழ்பெற்ற விஞ்ஞானி அல்பேரட் ஐன்ஸ்ரீன் படித்த பல்கலைக்கழகம் அங்குதான் உண்டு. மிகவும் பெரியதும் அழகியதுமான பல்கலைக்கழகம் அது!.

"BERCH WOOD" மரங்கள் என்று ஒரு வகை மரங்கள் உண்டு. அவ்வளவு அழகிய மரங்களை நான் என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. எமது தமிழ் ஈழத்தில் நான் மாவீரர் துயிலும் இல்லங்களை இப்போதுதான் பார்த்தேன். நான் புலம்பெயர்ந்த பின்னர்தான் அவை எழுப்பப்பட்டன. நான் முதன் முதலில் ஒரு துயிலும் இல்லத்தை கிழக்கு ஜேர்மனியில் தான் பார்த்தேன்.

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனியுடனான போரில் உயிர்நீத்த ரஷ்யப்படையினரின் துயிலும் இல்லம் கிழக்கு ஜேர்மனியில் உள்ளது. ஒரு பெரிய நிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கான ரஷ்யப் படைவீரர்களை அடக்கஞ் செய்து......



அந்தத்துயிலும் இல்லம் சுற்றிவர ரஷ்யாவிலிருந்து வரவழைக்கப்பட்ட BERCH WOOD மரக்கன்றுகளை நாட்டியிருந்தார்கள். அந்த மரங்களில் உள்ள சிறப்பியல்பு என்னவென்றால்...... அவை உயரே வளர்ந்து பின்னர் தலைகுனிந்து வணக்கம் செலுத் துவது போல் வளைந்து வளரும்.அந்தமரங்களைப் பார்த்தவுடனேயே எமது மனதில் ஒரு மரியாதையும், இனம்புரியாத சோகமும் உருவாகும்.

இங்கே நீங்கள் காணும் புகைப்படம் இரண்டு ஜேர்மனியும் ஒன்றாக முதல்..... அதாவது BERLIN சுவர் உடைபடுவதற்கு முதல்." இந்தப் புகைப்படத்தில் அன்றைய மேற்கு ஜேர்மனியையும் .....அதன் தலைநகரான மேற்கு பேர்லினையும் காண்கிறீர்கள்.

அதி உயரமான தேவாலயம் தெரிகிறது. அதன் உச்சி இரண்டாம் உலகப்போரில் குண்டு வீச்சுக்கு இலக்காகி சிதைந்து கிடக்கிறது பார்த்தீர்களா....? போரின் எச்சங்களை ஜேர்மனியர் எவ்வளவு அழகாகப் பாதுகாக்கிறார்கள் என்பதும் புரிகிறது.

இப்பொழுது எமது நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்தையும் மடுமாதா கோவிலையும் நினைத்துப் பாருங்கள்.....

நான் நினைத்துப் பார்க்கிறேன்!

நெஞ்சு, வெடிக்குமளவிற்கு சோகங் கொள்கிறது. மனசு அறியாமலேயே இதயத்தின் அடியிலிருந்து பெருமூச்சு வருகிறது.

நானும் இந்த நீலக் கண்ணனும் இரண்டு ஜேர்மனிகளையும் அதாவது மேற்கு ஜேர்மனி- கிழக்கு ஜேர்மனிகளையும் சுற்றித் திரிந்து விட்டு ஆளுக்காள் நன்றி சொல்லி விட்டுப்பிரிந்து போய்விட் டோம்.

அகதிகள் இப்படித்தான்! நிரந்தரமான விலாசம் அவர்களுக்கு இல்லை! புலம்பெயர் நாட்டிலும் எங்கள் ஈழத்தமிழர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற பெரிய பிரச்சினை என்னவென்றால "அகதிஅநதஸ்து" பெறுதல். நாங்களே ஓர் அகதி! அதற்குள் ஒரு அந்தஸ்தா!? ஏற்கனவே புரையோடிப் போனசாதி அந்தஸ்து இங்கே இருக்கின்றது. வெளிநாட்டில் வாழ்கின்ற எம்மவர்க்கு இதனோடு கூட இன்னொரு அந்தஸ்து இருக்கின்றது. உண்மையில் நீங்கள் புலம்பெயர் நாட்டில் இருந்தால், அகதி அந்தஸ்து பெற்றவர்- "தான் ஏதோ உயர் பீடத்தின் அதிகாரி'' என்பது போல், தன்னைப் பாவித்து அகதி அந்தஸ்து பெறாதோரை இவர்கள் ஏதோ ''அடிமைச் சங்கத்தின் பிரதிநிதிகள்" என்பது போல, இவர்களை அவர்கள் நடத்துவதை கண்டிருப்பீர்கள். அகதியிலும் ஒரு அந்தஸ்து பார்க்கும் கொடியமிருகங்களை ஈழத்தமிழர்கள் என்று சொல்லி உண்மையான வெள்ளைக்கார அகதிக்கு அறிமுகப் படுத்துவேனானால் எனது நாக்கு புழுத்து வெந்து விடும்.

அந்த நீலக்கண்ணனை நான் "செயின்" நதிக்கரையோரம் தான் சந்தித்தேன் . செயின் நதி பாரிஸ் நகரை ஊடறுத்துச் செல்லும் ஓர் அழகிய நதிபிரான்சில் இருந்து தான் நாங்கள் ஜேர்மனிக்கு எமது சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தோம். சுற்றுப்பயணம் முடிந்ததும் அந்த யூதனுக்கு என்ன நடந்தது? அவன் என்ன ஆனான்?, 'புதிய நாசி' (newnazy) படைகளினால் அவன் கொல்லப்பட்டிருப்பானா? அல்லது ஏதாவது ஒரு நதிக்கரையோரத்தில்

தனது அழகிய வெள்ளைமுடிகள் பனியில் உறைந்து போய்..... என்னைப் போல் ஓர் அகதியிடம் பணம் பெற்று, தனது வாழ்வில் தோற்றுப்போய் விட்டிருப்பானா? அல்லது ஒவ்வொரு மதில் சுவர்களையும் பார்க்கும் போது இது எல்லாம் 'BERLIN' சுவர் மதில்களௌன நினைத்து ஏக்கப் பெருமூச்சுக் கடலில் தத்தளித்துக்கொண்டு இருப்பானா? அதன் பின்னர் ஆறு வருடங்கள் கழித்துக் கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் ஒன்றாகத் தொடங்கியது.

* * * *

சோவியத் யூனியன் உடைபடுகிறது.....!

பொது உடைமை நாடுகள் வறிய நாடுகள் ஆகின்றன....!

அமெரிக்க முதலாளித்துவம் தனது கை வரிசையைக் காட்டுகின்றது.......!

## பகுதி-05

வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் நடக்கின்றது.....!

ஐரோப்பாவின் எல்லைகள் விரிகின்றன.....!

சிறிய பல புதியநாடுகள் தோன்றுகின்றன.....!

பெரிய நாடுகள் எல்லைகளை விஸ்தரிக்கின்றன.....!

* * * *

'BERLIN' சுவர் வீழ்கிறது. இந்த வரலாற்றுச் சம்பவத்தில் நானும் கலந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அப்பொழுது நான் டென்மார்க்கில் இருந்தேன். ஜேர்மனியின் எல்லா மக்களும் சேர்ந்து.... ஐரோப்பாவின் பெரும்பான்மை மக்களும் சேர்ந்து BERLIN க்குச் சென்று.....

அந்த மாபெரும் மதிலை உடைத்துக் கொண்டிருந்தார்கள். நான் எனது மகனையும் இழுத்துக் கொண்டு BERLIN மதிற்சுவரை உடைப்பதற்குச் சென்றேன்.

வரலாற்றிலேயே ஐரோப்பாவில் நிகழ்ந்த மாபெரும் சம்பவம் அது. பெரும் திரளான மக்கள் தமக்குக் கிடைத்த ஏதோ ஒரு ஆயுதத்தினால் சுவரை வீழ்த்திக் கொண்டிருந்தனர். எனது மகனுக்கு நான் ஒரு சுத்தியல் வாங்கிக் கொடுத்தேன். அவனும் தன் பங்கிற்கு மதிலை உடைத்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தின் பின் எனது மகனைக் காணவில்லை .பதறிப்போய் சனக் கூட்டத்தின் நடுவே மகனைத் தேடினேன்.

ஒரு மூலையில் அவனை ஒத்த வயதுடைய வெள்ளைச்சிறுவனுடன்..... மதிலிலிருந்து உடைத்த கற்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அருகில் சென்று அவர்களைப் பார்த்தபோது- அந்த வெள்ளைச் சிறுவன் எனக்கு வந்தனம் சொன்னான்.

" Where is your father?" என்று கேட்டேன்.

"over there" என்று சுட்டிக் காட்டினான்.

அங்கே பார்த்தேன்.

ஒரு வெள்ளைக்காரன் பெரிய ஓர் அலவாங்கினால் முழு மூச்சுடனும்.... ஆத்திரத்துடனும்..... ஆக்ரோஷத்துடனும் சுவரை உடைத்துத் தள்ளிக் கொண்டிருந்தான்.

அருகில் சென்று.

"Hello" என்றேன்.

அவன் திரும்பினான்.

என்ன அதிசயம்.....!

செயின் நதிக்கரையோரம், ஜேர்மனியில் அகதியாக்கப்பட்ட அந்த நீலக் கண்ணன் முகத்தில் வியர்வையுடன் நின்று கொண்டிருந்தான்.

* * * *

மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போமா....?

---

## காயமடைந்த மாணவர்களின் மருத்துவ அறிக்கைக்கு உத்தரவு

பத்தனை - சிறிபாத கல்வியற் கல்லூரியை மீண்டும் திறக்குமாறு ஆர்ப்பாட்டம் நடாத்திய வேளை சிறிலங்காப் பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தோர் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட சட்டமருத்துவ நிபுணர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.கடந்த மேமாதம் ஹற்றன் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மூன்று பேர் காயமடைந்தார்கள்.

இவர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு விசாரணைகளை நடாத்துகின்றது.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 12 போனஸ் ஆசனங்கள் கிடைத்தன

6 மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் 6 மாகாண சபைகளிலும் வெற்றிபெற்ற ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு மேலும் 12போனஸ் ஆசனங்கள் கிடைத்துள்ளன. எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எவ்வித போனஸ் ஆசனங்களும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் போனஸ் ஆசனங்களுடன் சப்ரகமுவ மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது. மத்திய மாகாண சபையில் 30 ஆசனங்களும். மேல் மாகாணத்தில் 59 ஆசனங்களும், ஊவாவில் 21 ஆசனங்களும், வட மத்திய மாகாணத்தில் 22 ஆசனங்களும்,தென்மாகாண சபையில் 36 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்துள்ளன. இதேவேளை இந்த மாகாண சபைகளுக்கு எதிர்க்கட்சி தலைவர்களை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடவுள்ளது. (32)

யாழ்ப்பாணம்

**5.** பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் தேசியத் தலைவர் அவர்கள் வீரகாவியமாகிய கரும்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியதோடு கரும்புலிகள் நினைவாக நிதர்சன நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "உயிராயுதம்-5, கடற்புலிகள் பாகம்-8," ஞானரதனின் "புயல் புகுந்த பூக்கள்" காவியப்படைப்புக்கள் வெளியீட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.





*. மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்ற இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் விடுதலைப்புலிகள் இயக்கப்போராளி ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயம டைந்தனர்.

*. ஹெல உறுமய பௌத்த பிக்கு வசித்து வந்த ஹிங்குராங்கொட பௌத்த விகாரையில் ஏழு துப்பாக்கிகள், ஆறு கைக்குண்டுகள், கையடக்கத் தொலை பேசி, ஜெலிக்னைட் குச்சிகள் 10 கைப்பற்றப்பட்டன.

**6.** பொலநறுவை மாவட்டம் ஹிங்கு ராங்கொட என்ற இடத்தில் உள்ள விகாரை ஒன்றில் ஆயுதங்களுடன் தங்கி யிருந்த 14 தமிழ் இளைஞர்கள் பொலிசா ரால் கைது.

* 'பயிற்சியின் ஊடே உயர்ச்சி பெறு வோம்' என்னும் இலக்குடன் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத் தினால் 'அரும்புகள்' உதைபந்தாட்டம் பயில ரங்கம் கிளிநொச்சியில் ஆரம்பம்.



பயிலரங்க ஆரம்பத்தில்

* மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்க ளில் உள்ள வீடுகளில் திடீர் சோதனை நடத்துவது, வீதிச் சோதனைகள் மேற்கொள்வது உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக அதிகரிப்பு என அவசர பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

**7.** கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பெண் ஒருவரால் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதில் ஒரு இன்ஸ்பெக்ரர், ஒரு கான்ஸ்டபிள் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். பன்னிருவர் காயம்.

**8.** ஹிங்குராங்கொடவிற்கு அருகில் உள்ள பௌத்த விகாரை மீது இரவு 8.00 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் விகாராதிபதி வளை கெடிகமுவ சுகந்ததேரர் படுகாயமடைந்தார்.

* தமிழ்த் தேசியத்தையும், மதத்தையும் உரிமைப் போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் வகையில் கருணாவின் கைக் கூலிகளாக நின்று இராணுவப் புலனாய் வாளர்கள் உதவியுடன் செயற்பட்ட இருவ ருக்கு இலுப்பைக் கடவைச் சந்தியில் விடுத லைப்புலிகளால் மரண தண்டனை விதிக் கப்பட்டது.

**9.** கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் திறந்து வைக்கப பட்டது.




செயலகத் திறப்பில்

*. கரும்புலிகள் நாளன்று நிதர்சனம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழீழ தேசியத் தலைவரால் வெளியிட்டு வைக்கப்பட்ட "புயல் புகுந்த பூக்கள்", வீடியோப் படம், "கடற்கரும்புலிகள் பாகம்-7, பாகம்-8 இசைத்தட்டுக்கள்" சிறப்பான முறையில் மக்கள் மத்தியில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன.




05.07.2004-11.07.2004

*. தமிழரின் கல்வித்தேவைகளும் இன்றைய நிலையும் குறித்த ஆய்வுப் பட்டறை தமிழீழ விடுதலைப்புலி களின் திட்டமிடல் மேம்பாட்டு செயலகத் தில் ஆரம்பமானது.



ஆய்வுப்பட்டறையில்

**10.** ஊவா, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்.

*மேஜர் காந்தருபனின் 14ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் காந்தருபன் அறிவுச்சோலை புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல்.



அடிக்கல் நாட்டும் நிகழ்வில்

*மாரீசனின் 'போர்க் காலக்கவிதை கள்' நூல்வெளியீடு.



வெளியீட்டுவிழா

**11.** கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொவ்டே கிளிநொச்சிக்கு திடீர் விஜயம்.

*. ஆனையிறவுப்பகுதியில் வீதி விபத்தில் ஒருவர் பலி



கோரவிபத்து

*. மூத்த பெண் படைப்பாளிகள் வானதி வெளியீட்டகத்தில் கௌரவிப்பு



மூத்த படைப்பாளிகள் கௌரவிப்பு

# தமிழீழத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப துறைசார்ந்தோர் அர்ப்பணிப்பு அவசியம்

## த.பொ.மே. நி. பொறுப்பாளர் கரிகாலன்

மன்னார் மாவட்டத்தில் விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசத் திலுள்ள விவசாய அமைப் புக்கள், நன்னீர் மீன்பிடிப்போர், கால் நடைவளர்ப்போர் என் போருக்கான சந்திப்பொன்று அண் மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனப் பொறுப்பாளர் கரிகாலன் நடத்தினார். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் தேசி யக்கொடியை ஏற்றிவைத்ததுடன், மன்னார் மாவட்ட பொருண்மிய நிறுவனப் பொறுப்பாளர் முல்லைவீரன் தலைமையேற்று நிகழ்வை நடத்தினார்.

நிகழ்வில் உரையாற்றிய கரிகாலன் தேசியத்தலைவர் அவர் களின் சிந்தனையில் உருவாகிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழத்தின் பொருளாதாரத்தை மேம்படுத் துவதில் அக்கறை கொண்டுள் ளதாகவும் ஒரு நாட்டின் முதுகெ லும்பு அதன் பொருளாதாரமே எனவும் அதனைக் கட்டி எழுப்ப சகல துறை சார்ந்தவர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண் டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விடத்தல்தீவு பங்குத்தந்தை வணபிதா ஜெய பாலன், மன்னார் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் விவசாய சம்மேளனத் தலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

### ஆசிரியர்களுக்கு மாதாந்தம் சுகாதார பயிற்சிக் கருத்தரங்கு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள ஆசிரி யர்களுக்கு சுகாதாரப் பயிற்சிக் கருத்தரங்கு மாதந்தோறும் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களின் சுகாதார நலன் சம்பந்தமான செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் மாதந தோறும் 2ஆவது சனிக்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 12.00 மணிவரை இக்கருத்தரங்கு நடை பெறவுள்ளதாக நொச்சிமோட்டை பொதுச்சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார். (10)

# இரு வைத்தியசாலைகளுக்கு அம்பியுலன்ஸ் வழங்கல்

"நீரப்" திட்ட நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவை பிரதிப்பணிமனையினால் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக் கும், நட்டாங்கண்டல் அரசினர் வைத்தியசாலைக்கும், தலா ஒவ்வொரு நோயாளர் காவு வண்டி கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைப்பிரதிப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி வைத்தியசாலைகளின் முக்கியத்துவத்தையும் மக்கள் அதிகரிப்பு தொகையையும் கருத்திற் கொண்டு கடும் முயற்சியின் மத்தியில் இரண்டு நோயாளர் காவு வண்டிகள் பெறப்பட்டு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும். மேற்படி நோயாளர் காவு வண்டிகளை சரியான முறையில் பயனாளிகளுக்கு பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ஆ)

# முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கல்

## -மின் இயந்திரக் கட்டடமும் திறப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் மின் இயந்திரக் கட்டடத் திறப்புவிழாவும் பொருட்கள் கைய ளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிறன்று மு.ப 9.00 மணிக்கு மேற்படி வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தலைவர் மு.குகதாசன் தலைமையில் அகவணக்கத்துடன் வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

மின் இயந்திரக்கட்டடத் தொகுதி திறப்பு விழா நிகழ்வுக்கான மங்கல விளக்கினை கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை ஏற்றி வைக்க கட்டடத்தொகுதியினை சம்பிரதாய பூர்வமாக நாடா வினை வெட்டி பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத் தினம் திறந்து வைக்க, கட்டடத்தினுள் அவுஸ்திரேலியா வில் உள்ள தேவலிங்கத்தினால் அன்பளிப்பு செய்யப் பட்ட மின் பிறப்பாக்கியினை முல்லைத்தீவு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா இயக்கி மின் அழுத்தியினை அழுத்தி ஆரம்பித்து வைத் தார். தொடர்ந்து கனடா வாழ், குமுழமுனையூர் கந்த சாமி நுட்பராசாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வைத்தியசாலைக்குரிய பொருட்களை அவரது சகோதரர் தெய்வேந்திரராஜா மேற்படி வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராசதுரையிடமும், நலன்புரிச் சங்கப்பொருளாளர் தாமோதரம்பிள்ளையிடமும் கையளித்ததையடுத்து கருத்துரைகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்த வெளிநாட்டில் வாழும் முல்லைப் பிரதேசத் தோரின் பெற்றோர், உறவினர் கௌரவிக்கப்பட்ட துடன், அனைவருக்கும் மதியபோசனம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஆ)

# 4 மாதங்களில் 15 சிறுவர்கள் துன்புறுத்தல் வவுனியா சிறுவர் பாதுகாப்பு மையம் தகவல்

## - முறைப்பாடுகளைப் பெறவும் ஏற்பாடு

வவுனியா மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் 15 சிறுவர்கள் பல்வேறு வகையானதுன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாக வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம் தெரிவிக்கின்றது.

வவுனியா அரச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான கூட்டத்திலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் சம்பந்தமாகவும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கான தீர்வு சம்பந்தமானசெயன்முறைகள் இந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிறுவனம் இயங்கும் என்றும் இதற்கான நிதியினை யுனிசெப் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் எஸ்.ரகுநாதபிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தமக்குக்கிடைத்த முறைப்பாடுகளானது பாலியல் சம்பந்தமாக உடல் ரீதியான துன்புறுத்தல், வீட்டு வேலைக்கு அமர்த்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பானது என்றும், மார்ச் மாதம் 06 முறைப்பாடுகளும், ஏப்ரல் மாதம் 06 முறைப்பாடுகளும், யூன் மாதம் 03முறைப்பாடுகளும் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக் கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 06 ஆண்களும், 09பெண்களும் அடங்குவதாகவும் நலன்புரிநிலையத்திலிருந்து 07 முறைப்பாடுகளும மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் இருந்து 04 முறைப்பாடுகளும், ஏனைய இடங்களில் இருந்து 4முறைப்பாடுகளும் கிடைததுள்ளன. இவர்கள் 10 வயதுக்கும்,20 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

வவுனியா பொது மருத்துவமனையில் இயங்குகின்ற தமது காரியாலயத்தில் முறைப்பாடுகளை யார் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (21)

## 13ஆம் ஆண்டு நினைவுநாள்

| பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 17 - 02 - 1971 |  | 14 - 07 - 1991 |

### லெப். மாகிரட்

### (சாந்தினி சிற்றம்பலம்)

14.07.91 அன்று ஆகாய கடல் வெளிச்சமரின்போது வீர காவியமாகிய எம் செல்வ மகளை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வடமராட்சி கிழக்கு,
வேம்படி,
உடுத்துறை.

(4798)

குடும்பத்தினர்.

## நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு சேமிப்புத் திட்டம் அறிமுகம்

(புதுக்குடியிருப்பு)

தண்ணிமுறிப்பு, கணுக்கேணி, மதவளசிங்கம் குளங்களைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடியாளர்களின் எதிர்கால வாழ்வினைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான சேமிப்புத் திட்டம் கடந்த 08 ஆம் திகதி வியாழக்கிழமை குமுழமுனையில் கிராமிய அபிவிருத்தி வங்கியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது 58 மீன்பிடியாளர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை.மாவட்டப் பொறுப்பாளர் பூங்குன்றன், துணைப்பொறுப்பாளர் மோகன், மாவட்டச் செயலாளர் அமிர்தலிங்கம், பிரதேச இணைப்பாளர் சிவகுமார், வலயப் பொறுப்பாளர் ஒளிச்செல்வன், கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் கமலக்கண்ணன் உட்பட பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (08)


## மணமகள் தேவை



லண்டனில் வசிக்கும் 29 வயதுடைய R.C றோமன் கத்தோலிக்க மதத்தைச்சேர்ந்த நல்ல நிறமுடைய சராசரி உயரமான (B.A, CONMIC,CIMA) பட்டதாரி வாலிபருக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏதோ ஒன்றில் நிரந்தர குடியுரிமையுடன் பண்புள்ள படித்த மணமகள் தேவை.

மணமகன் பெற்றோர் முகவரி:-
நிஷா தொலைத் தொடர்பகம்,
கண்டிவீதி-மிருசுவில்
தொலைபேசி இலக்கம்

077777-5503
60221-2378

மணமகன் - லண்டனில் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

07818651154
07751467439

(சி-10017)


## 09 ஆம் ஆண்டு நினைவலைகள்

| ஜனனம் | | வீர மரணம் |
|---|---|---|
| 27 - 05 - 1978 |  | 14 - 07 - 1995 |

### வீரவேங்கை மன்னன்

### லோகநாதன் கோகுலன்/ கவாஸ்கர்

[யா/ பரியோவான் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்]

எங்கள் அன்புச் செல்வமே- கவாஸ்கர்
யாழ். மண்ணை முன்னேறிப் பாய்ச்சலில் கைப்பற்ற வந்த
எதிரிபடையை நிலைகுலைய வைத்த புலிப்பாய்ச்சல்
தன்னில் வீரகாவியமாகி இன்றுடன் ஒன்பது
வருடங்கள் ஆகிவிட்டதையா,
95ஆம் ஆண்டு ஆடி 14இல் எங்கள் நெஞ்சமதில்
ஏற்பட்ட துயரம் என்றும் எத்தனை ஆண்டுகளானாலும்
எம் மனதில் நீங்காது.
நீ என்றும் மாவீரன் மன்னனாய் தமிழீழமதில்
நிலைத்திருப்பாய் எங்கள் கண்மணியே.

இந்நாளில் புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் வீரகாவியமான அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

(4813)

செல்வராஜா,
நெத்தலியாறு,
தருமபுரம்.

என்றும் உன் நினைவுகளுடன்
சித்தப்பா, சித்தி, குடும்பத்தினர்.




## புதுமனை புகுவிழா

அன்புடையீர்,

நிகழும் சுபமங்களகரமான தாரண வருடம், ஆனி மாதம், 30ஆம் நாள் (14.07.2004)புதன்கிழமை காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

### தாய கம் இல்லம்

எமம் புதுமனையில் குடிபு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, புதுமனையை ஆசீர்வதித்து, விழாவைச் சிறப்பித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைப்பதுடன்"தாயகம்"இல்லத்திற்கு எமது அழைப்பை ஏற்றுவருகைதரும் அனைவரையும் வருக! வருக! என வரவேற்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்லவரவை நாடும்

(4637)

திரு .திருமதி தனபாலசிங்கம்,
இல.9,குலசிங்கம் வீதி,
துணுக்காய்.

# பிரதான கட்சிகள் இழைத்த தவறே மக்கள் வாக்களிக்காமைக்கு காரணம்

## -இ.தொ.காங்கிரஸ், மு.காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த சனியன்று சிறிலங்காவில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான மக்கள் வாக்களிக்காமல் விட்டதற்கு ஐ.தே.முன்னணியும், ஐ.ம.சு முன்னணியும் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையே காரணம் என இ.தொ.கா.வும் முஸ்லிம் காங்கிரசும் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிச் செயலரான ஹசன் அலி இவ்விரு கட்சிகளிலும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக டெய்லி மிரர் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் தமது கட்சி 04 ஆசனங்களைப் பெற்றுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும், கடந்தமுறை 2 ஆசனங்களை தம் கட்சி பெற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இ.தொ.காவின் முத்து சிவலிங்கம் தெரிவிக்கும் போது முன்னரைவிட தமது கட்சிக்கு மேலும் ஆதரவு கிடைத்திருக்கலாம் எனவும், ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடைபெறுவதால் மக்கள் வெறுப்படைந்து விட்டனர் எனவும், வழமையாக 05 வருடங்களுக்கொரு முறை நடைபெறும் தேர்தல் இப்போது வருடம் ஒருமுறை நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். இரு பிரதான கட்சிகளும் விடும் தவறுகளாலேயே ஏனைய சிறு கட்சிகளும் தவறிழைக்க வேண்டியேற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.


## விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஹிங்குராங்கொட வுவஸ்றீ போதிறுக்காரா விகாரை மீதான குண்டுத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட தேரர் பொல நறுவை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். பொலநறுவை பொலிஸ் நிலைய விசேட குழு ஒன்று இவரைக் கைது செய்திருந்தது.

## எம் கற்பனையின், மலரின் நான்காம் ஆண்டு நினைவு

| தாயக மண்ணில் | | காவியமானது |
|---|---|---|
| 1974 | | 2000 |
| - | | - |
| 05 | | 07 |
| - | | - |
| 23 | | 14 |



மாவீரர்

### வீரவேங்கை அன்பு

(அந்தோனிப்பிள்ளை சகாயபாமா)

என் அன்பு மகளே, உன்னை நாம் கற்பனைகளால் கவிபாடவா நீ எம்மை விட்டுப் பிரிந்தாய்-நாம் அலறும் போதும் சத்தம் உன் காதில் விழவில்லையா? ஒருமுறையேனும் உன் கண்களைத் திறந்து நாம் கவியினால் பாடும் வார்த்தைகளைப் பார் மகளே நாம் படும் துயர் புரியும். என்றும் உள்ளத்தால் சொல்ல முடியாமல் தவித்து நிற்கும் கற்பனைகள் எத்தனை? அத்தனையும் ஓர் நொடியில் முடிந்ததே

உன் துயரால் வாடிநிற்கும்-

குடும்பத்தினர்,
சிமாட் தையலகம்,
அரச விடுதி முன்பாக
கிளிநொச்சி.

(4816)

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

காலம்:- 18.07.2004 ,ஞாயிறு, பி.ப.1.00 மணி
இடம்:- கலைவாணி சவாரித்திடல்,வட்டக்கச்சி
பிரிவுகள்:-அ,ஆ,இ,ஈ நான்கு பிரிவுகள்
(ஈ பிரிவு தரம் கண்டு அனுமதிக்கப்படும்)

குறிப்பு:- கிளி. மாவட்ட சவாரி சங்கத்தில் அங்கத்தவர்கள் மட்டும் போட்டியில் கலந்துகொள்ள முடியும். பிறமாவட்டங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது.

தகவல்:-
வட்டக்கச்சி,இராமநாதபுரம் மக்கள்.

(4812)

## பதின்மூன்றாம் ஆண்டின் நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 28 | | 14 |
| - | | - |
| 05 | | 07 |
| - | | - |
| 1967 | | 1991 |



### லெப். கேணல் சூட்டி

(செல்வேந்திரன்)

கெருடாவில், சாவகச்சேரி

வெஞ்சமர் களத்திலே நின்றாடினாய்
வெற்றிலைக் கேணியில் குண்டேந்தினாய்
நெஞ்சத்தில் நீங்காத நிழலாகினாய்
நினைவினில் மாறாத ஒளியாகினாய்


30 யூனியன்குளம்,
கிளிநொச்சி.

(4799)

குடும்பத்தினர்.



## கெய்ன்ஸ் டெஸ்ட் போட்டி முடிவு மகிழ்ச்சியாகவுள்ளது – அத்தப்பத்து



இறுதிடெஸ்ட் போட்டி குறித்து தான் மகிழ்ச்சி அடைவதாக சிறிலங்கா கிரிக்கெட் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் 2 விக்கெட்டுக்கு 370 ஓட்டங்களை பெற்றிருந்த அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்களை வீழ்த்துவதற்கு அணியின் சுழற்பந்து வீச்சு சிறப்பாக அமைந்திருந்தது! முரளி இந்தப் போட்டியில் விளையாடாத நிலையில் உபுள் சந்தன சிறப்பாக பந்து வீசினார்.

அதைவிட துடுப்பாட்டமும் ஓரளவு சிறப்பாக அமைந்திருந்தது. இன்னமும் அதிகளவில் எங்களை திருத்திக்கொள்ள வேண்டிய நிலையில் சிறிலங்காவின் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர் என்றும் அத்தபத்து தெரிவித்தார்.

## ஒழுக்காற்று விதிகளை மீறினார் மெக்ராத்துக்கு 25 வீத தண்டம்



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ரா சிறிலங்கா அணிக்கு எதிரான சுற்றுப் போட்டியில் பெற்ற வருமானத்தில் 25 வீதத்தை தண்டப்பணமாக செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று ஜெயசூரியாவின் LBW முறையிலான ஆட்டமிழப்பு தொடர்பாக அவர் நடந்து கொண்ட விதம் குறித்து இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆட்டமிழப்பை நடுவரிடம் கோருகின்ற போது ஜெயசூரியாவை பாதிக்கக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது எனவும் இது ஒழுக்காற்று விதிகளை மீறிய செயலாக கருதப்பட்டுள்ளது.

## சிறிலங்கா – அவுஸ். இரண்டாவது டெஸ்ட் போட்டி

## பின்வரிசை வீரர்களின் நிலைத்த ஆட்டத்தால்

## வெற்றி வாய்ப்பை இழந்தது அவுஸ்திரேலியா




அவுஸ்திரேலிய சிறிலங்கா அணிகளுக்கிடையில் கெய்ன்சில் நடைபெற்று வந்த இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

முன்னதாக 2 விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டியின் இறுதி நாளான நேற்றுக் காலை அவுஸ்திரேலிய அணி அதன் இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்தது.

மொத்த ஓட்ட எண்ணிக்கை 195 ஓட்டங்களாக இருக்கும்போது அதன் மூன்றாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. டேமியன் மாட்டீன் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லீமன் 21 ஓட்டங்களுடனும், ஹட்ரிச் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அவுஸ். அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மத்யூ ஹெய்டன் 132 ஓட்டங்களைப் பெற்று உபுள் சந்தனவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஹெய்டன் தனது டெஸ்ட் வாழ்வில் 20ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அவுஸ். அணியின் கடைசி ஐந்து விக்கெட்டுக்களும் 8 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது.

பந்து வீச்சில் உபுள் சந்தன 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனை அடுத்து 355 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிறிலங்கா அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓவர்களில் 183 ஓட்டங்களைப் பெற்றது. 66 ஓட்டங்களை அதிகபட்சமாக குமார் சங்கக்கார பெற்றார்.



இரண்டு இனிங்சிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சங்கக்கார முதல் இனிங்சில் 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

முன்னதாக 15 ஓட்டங்களைப் பெற்ற போது முதல் விக் கெட்டை இழந்தது. முதல் இனிங்சில் 133 ஓட்டங்களைப் பெற்ற அணித் தலைவர் மாவன் அத்தப் பத்து ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜெயசூரியா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜெயவர்த்தன ஆறு ஓட்டத்துடனும், திலான் சமரவீர ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்ட மிழந்தனர். திலகரட்ண டில்சான் 21, களுவித்தாரண 14 ஓட்டங்களை முறையே பெற்று ஆட்டமிழந்தனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.



பந்து வீச்சில் ஷேன் வோர்ன் 4 விக்கெட்டுக்களையும், கிளெஸ்பி 2 விக்கெட்டுக்களையும், மெக்ரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.




## முரளியின் சாதனையை முறியடிப்பது கடினம் ஒரு விக்கெட்டால் சாதனையைத் தவறவிட்ட வோர்ன்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள சிறிலங்காவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் சாதனையை அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் நேற்று சமன்செய்தார்.

அவுஸ்திரேலியாவின் கெய்ன்ஸ் நகரில் அந்நாட்டு அணிக்கும், சிறிலங்கா அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள ஷேன் வோர்ன் முரளிதரனின் சாதனையைச் சமன் செய்தார்.

இப்போட்டியின் முதல் இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள வோர்ன், இரண்டாவது இனிங்சில் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதனை அடுத்து டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் வீழ்த்திய விக்கெட்டுக்கள் 527ஆக உயர்ந்தது.

இதன் மூலம் உலகிலேயே அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள முத்தையா முரளிதரனின் சாதனையை வோர்ன் சமன் செய்தார்.

இதுவரை 112 டெஸ்ட் போட்டிகளில் ஷேன்வோர்ன் விளையாடி முரளியின் சாதனையைச் சமப்படுத்தியுள்ளார். முரளிதரன் 90 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 527 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

முரளிதரனின் சாதனையைச் சமப்படுத்திய வோர்ன் போட்டி முடிவடைந்த போது கவலையுடன் காணப்பட்டார்.

போட்டி முடிவடைந்தவுடன் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த வோர்ன் முரளிதரனின் சாதனையை முறியடிப்பது கடினமான விடயம் எனத் தெரிவித்தார்.

## அமெரிக்காவின் பிரபல ஓட்ட வீரர் மௌரிஸ் கிறீன் ஒலிம்பிக் 100 மீற்றர் போட்டியில் ஓடுவார்

அமெரிக்காவின் பிரபல ஓட்ட வீரரான மௌறிஸ் கிறீன் எதென்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளார்.

மூன்று முறை உலக சம்பியன் பட்டத்தை வென்றுள்ள இவர் அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற தகுதி காண் போட்டியில் முதலிடத்தைப் பெற்று வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டார்.

இவருக்கு அடுத்த படியாக இரண்டாம் மூன்றாம் இடத்தைப் பிடித்தவர்கள் முறையே யஸ்ரின் கட்லின் (9.92 செக்கன்) ஷோன் க்ரோபோட் (9.93 செக்கன்) ஆவர்.


கிறீன் 9.91 செக்கன்களில் 100 மீற்றரை ஓடி முடித்தார். முன்னர் 1984ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் கார்ல் லூயிஸ் பதக்கம் வென்றார். இதற்கு முன்பு இப்போட்டிகளில் வென்ற வீரர்களை விட தான் சிறப்பாக ஓடுவதாக கிறீன் தெரிவித்துள்ளார். இப்போட்டிகளுக்காக மரியன் ஜோன்ஸ், ரிம் மொன்டி கொமரி ஆகியோருக்கு பயிற்சி வழங்கியுள்ள ரவர் கிரஹம் தெரிவிக்கையில், அனைவரையும் விட கிறீன் சிறப்பாக செயற்படுவதாகத் தெரிவித்துள்ளார். அவர் சிறு சிறு தவறுகளையே விட்டிருப்பதாகவும் காயமடைந்திருந்ததாகவும் கூறிய பயிற்சியாளர் கிரஹம், அவரைப் போட்டியில் இருந்து ஒருபோதும் நீக்க விரும்பவில்லை என்றார்.

## ஸ்டெபி, எட்பர்க்குக்கு கௌரவ விருது

முன்னாள் டென்னிஸ் நட்சத்திரங்கள் ஸ்டெபிகிராபுக்கும் ஸ்வீடன் வீரர் ஸ்டீபன் எட்பர்க்குக்கும் 'ஹால் ஆப் பேம்' கௌரவம் கிடைத்துள்ளது. அமெரிக்காவில் உள்ள நியுபோர்ட்டில் ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்ச்சி நடைபெற்றது இவர்களுடன் ஆஸ்திரேலிய சாம்பியன் பட்டத்தை வென்ற முதலாவது அமெரிக்கரான டோரதி சென்னிக்கும் அக் கௌரவம் கிடைத்தது. 22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றவர் ஸ்டெபி. 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை 4 முறை வென்ற ஒரே வீராங்கனை ஸ்டெபி. 1988 இல் நான்கு கிரான்ட்ஸ்லாம் பட்டங்களுடன் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கமும் வென்றார் அவர். எட்பர்க் 72 வாரங்களுக்கு உலகின்முதல் நிலை வீரராக இருந்துள்ளார். இரட்டையர் பிரிவிலும் முதல்நிலையில் இருந்துள்ளார். ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

## ஆசிய அணிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது வெற்றிக்காக கடுமையாக போராட வேண்டும்

### பயிற்சியாளர் ஜோன்ரைட்



ஆசியக் கோப்பைப் போட்டியில் பங்கேற்கும் அணிகளை எளிதாகக் கருதக் கூடாது என்றும் வெற்றிக்காக இந்திய அணி கடுமையாகப் போராட வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்தியக் கிரிக்கெட் அணி ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து புறப்பட்டது. அப்போது விமான நிலையத்தில் வைத்து கருத்துத் தெரிவித்த ஜோன்ரைட்,


சிறிலங்கா அணி வலிமை மிகுந்தது தான் என்ற போதிலும் அதனையும் வீழ்த்தி இந்தியா கோப்பையைக் கைப்பற்றும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய அணியினர் நல்ல உடற்தகுதியுடன் இருப்பது அணியின் வலிமையை அதிகரித்துள்ளது எனத் துணைத்தலைவர் ராவிட் தெரிவித்தார்.

## கோபா கால்பந்து சம்பியன் போட்டியில் பிரேசிலின் அட்ரியானோ 'ஹட்ரிக்' அடித்தார்

. தென் அமெரிக்க கால்பந்து சம்பியன் (கோபா கால்பந்து) போட்டியின் காலிறுதி ஆட்டத்திற்கு பிரேசில் முன்னேறியது. பெருநாட்டின் அரெகுயிபாவில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பிரேசில் 4-1 என்ற கோல் வித்தியாசத்தில் கோஸ்டாரிக்காவைத் தோற்கடித்தது. அந்த அணிவீரர் அட்ரியானோ ஹட்ரிக் கோல் அடித்தார் 44,54, 68ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் அடித்தார். மற்றொரு கோலை ஜுவன் அடித்தார். கோஸ்டா ரிக்காவுக்காக லூயிஸ்மரின் 81ஆவது நிமிடத்தில் அடித்தகோல் அந்த அணிக்கு ஆறுதலாக அமைந்தது.


"ஹட்ரிக் கோல்அடித்தது மிகமிக மகிழ்ச்சியளிக்கிறது. இம்மாதிரி ஒவ்வொரு ஆட்டத்திலும் எனது திறமை தொடரும்" என நம்பிக்கை தெரிவித்தார். இவ் வெற்றிமூலம் 'சி' பிரிவில் 6 புள்ளிகளுடன் முன்னிலை பெற்றுக் காலிறுதி வாய்ப்பை உறுதி செய்துகொண்டுள்ளது. பராகுவே 3புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது. ( காஸ்டா ரிக்கோ. சிலி அணிகள் வெற்றி ஏதும் பெறவில்லை.'ஏ' பிரிவில் கொலம்பியா 6புள்ளிகளுடன் காலிறுதி வாய்ப்புக்கு முன்னேறியுள்ளது. ஒவ் வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறும். அதேசமயம் 3ஆவது நிலையிலுள்ள சிறந்த இரண்டு அணிகளும் அடுத்த கட்ட வாய்ப்பைப் பெறும்.




மத்திய பிரான்ஸில் நேற்று நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்பந்தயத் தின் 9ஆவது கட்ட பந்தயத்தில் நோர்வேயின் தோர் ஹஸொவ்ட்(வலது)டின்முன்னாள் அவுஸ திரேலியாவின் றொபிமக் எவன் (இடது) முடிவுக் கோட்டைக் கடக் கின்றார்கள்.

## ஃபோர்முலா–1 கார் பந்தயத்தில் ஷூமாக்கருக்கு 10ஆவது பட்டம்

சில்வர்ஸ்டோனில் நடைபெற்ற ஃபார்முலா-1 கார் பந்தயத்தில் ஜெர்மனியின் மைக்கேல் ஷுமாக்கர் சாம்பியன் பட்டம் வென்றார். உலக சாம்பியனைத் தீர்மானிப்பதற்காக 18 பந்தயங்கள் கொண்ட தொடர் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. இத் தொடரின் 11 ஆவது பந்தயம் இங்கிலாந்தின் சில்வர்ஸ்டோனில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மொத்தம் 37 சுற்றுகள் கொண்ட பந்தய தூரத்தை பெராரி காரில் 735 கிலோ மீற்றர் வேகத்தில் விரைந்து முதலிடம் பெற்றார் ஷுமாக்கர் பின்லாந்து வீரர் கி.மி ராய்க்கானன் இரண்டாவது இடத்தையும், பாரிச்சலோ 3ஆவது இடத்தையும் பெற்றனர். 6 முறை உலக சாம்பியன் பட்டம் வென்றுள்ள ஹுமாக்கர் இத் தொடரில் வெல்லும் 10 ஆவது பட்டம் இது. அதே சமயம் இது வரை 80 பந்தயங்களில் அதிபதிப் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.



## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழதேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-07-2004
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## யுத்தநிறுத்தத்திற்கு அச்சுறுத்தல்!

“கொழும்பிலும், கிழக்கிலும் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கும்–விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாட்டை அச்சுறுத்தும் செயலாகும்” ஏன்ற சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் தவறானவையல்ல. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கூட இதை ஒத்த கருத்துக்களைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

ஆனால் இத்தகையதொரு நிலை உருவாவதற்கு யார் காரணம்? இரண்டரை வருடகாலமாக நீடித்து வந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் பதட்டத்தையும், சமாதான முயற்சிகளின் முட்டுக்கட்டைகளையும் தோற்றுவித்தவர்கள்யார்? யுத்தநிறுத்தத்தைக் தமக்குச் சாதகமாக்கி அரசியல், இராணுவச் செயற்பாடுகள் மூலம் ஓர் மறைமுகப் போர் ஒன்றைத் தொடக்கியவர்கள் யார்?.

சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி, ஆயுதப்படைத்தரப்பும்–குறிப்பாக இராணுவத்தரப்பும் அதன் புலனாய்வுத்துறையும்சரி கிழக்கில் நடக்கும் வன்முறைக்கும் தமக்கும் தொடர்பில்லை எனக் கூறிக் கொள்வதினால் மட்டும் இதற்கு அவர்கள் காரணமில்லை என்றோ இதன் பின்னணியில் அவர்கள் இல்லை என்றோ அர்த்தமாகிவிடாது. ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

இன்று கிழக்கில் நடக்கும் வன்முறைகள் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பில் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன என்பதே உண்மையாகும். இதனைத் தேடித்தான் கண்டறிதல் வேண்டும் என்பது அர்த்தமற்றதொன்று. இதனைத் தவிர இவ்வன்முறைகள் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறுகின்றன. அன்றி அங்கிருந்து இயக்கப்படுகின்றன என்பதும் நிராகரிக்கப்படமுடியாதவை.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நிகழும் வன்முறைகள் விடுதலைப்புலிகளுக்கும்– சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையிலான மாதாந்தச் சந்திப்புக்களை இரத்துச் செய்யும் அளவிற்கு நிலைமைகளைக் கொண்டு சென்ற போதும் இராணுவத்தரப்பு நிறுத்தவில்லை. வன்முறைகளைக் கட்டுப்படுத்துமாறு விடுதலைப் புலிகள் பலதடவை வலியுறுத்திய போதும் இராணுவத்தரப்பு நடவடிக்கை செவிசாய்ப்பதாக இல்லை. வன்முறையை நிறுத்தினால் இராணுவத்தரப்பிற்கு இதில் தொடர்புள்ளது என்பது நிருபணம் ஆகிவிடுமோ என்ற ரீதியில் அதன் செயற்பாடு உள்ளது.

இவை ஒருபுறம் இருக்க கருணாவிற்குக் கொழும்பில் புகழிடம் அளித்துள்ள ஆட்சியாளர்கள் கொழும்பில் கருணா எங்கிருக்கின்றார் என எமக்குத் தெரியாது. கருணாவிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான உறவு அவர்களின் தனிப்பட்ட உறவு எனச் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகின்றனர்.

இந்நிலையில் கொழும்பில் கடந்த வாரத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு யார் பொறுப்பாக இருப்பினும், இது கொழும்பில் சுமார் மூன்று வருடங்களின் பின்னர் நடந்த சம்பவம் என்ற ரீதியில் பதட்டத்தை அதிகரித்துள்ளது. அத்தோடு கொழும்பில் பாதுகாப்புக் கெடுபிடிகளையும், அச்ச உணர்வையும் அதிகரிப்பதாகியுள்ளது.

கொழும்புக் குண்டு வெடிப்பிற்கு யார் பொறுப்பு என அரசாங்கம் யாரையும் வெளிப்படையாகக் குற்றம் சாட்டவில்லை. ஆனால் சிறிலங்கா பொலிஸ்தரப்பு புலிகள் மீதே இக்குற்றச்சாட்டை சுமத்த முற்படுகின்றது. இதேவேளை இக்குண்டுவெடிப்பிற்குச் சமாதானத்தைச் சீர்குலைக்க விரும்பும் அரசின் ஆதரவு பெற்ற சக்திகளே காரணம் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

ஆனால் குண்டு வெடிப்பிற்கு யார் காரணமாக இருப்பினும் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் யார் காரணம் எனினும் கிழக்கில் அரசாங்கம் கைக்கொண்ட அணுகுமுறையின் வெளிப்பாடே கொழும்பில் குண்டுவெடிப்பிற்குக் காரணம் என்பதில் எந்தவிதமான கேள்விக்கும் இடமில்லை. அதாவது கிழக்கில் அரசாங்கம் வன்முறையைத் தூண்டிவருகின்றமையும், கொழும்பில் கருணாகுழுவினருக்குப் பாதுகாப்பு அளிக்க முற்பட்டமையுமே காரணமாகும்.

ஆகையினால் கிழக்கிலும் கொழும்பிலுமான வன்முறைகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலானால் அதற்குரிய பொறுப்பு அரசாங்கத்தையே சாரும் தனது அமைச்சரவை சகா ஒருவர் அரசாங்கம் தனது கொள்கை எனக்கூறிக்கொள்ளும் நிலைப்பாட்டிற்கு எதிரான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் போது அது அவரின் தனிப்பட்ட விடயமாகும் எனக் கூறி அரசு அதனைத் தட்டிக்கழித்துவிட முடியாது. ஒன்று அரசாங்கத்தில் இருந்து அவரை வெளியேற்றுதல் வேண்டும் அல்லது அவரின் நிலைப்பாட்டை அரசாங்கத்தின் நிலைபாடாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஆனால் அரசாங்கமோ கிழக்கில் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் முனையவில்லை. கொழும்பிலிருந்துகொண்டு தமிழர் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமலும் இல்லை. இதனால் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு இதையடுத்து யுத்த நிறுத்தத்திற்குஅச்சுறுத்தல் என்பது அரசாலேயே எழுந்துள்ளது. அச்சுறுத்தல் எழுந்து விட்டது எனக் கூறுவதானால் மட்டும் சனாதிபதியும் அரசாங்கமும் அதற்கு பொறுப்பற்றவை ஆகிவிட முடியுமா?

# சிறிலங்கா அரசின் அணுகுமுறைகள் மீண்டும் இனவாதத்தைத் தூண்டுவதாகவே அமைந்துள்ளது

### திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்

சிறிலங்கா அரசும் தென்பகுதி அரசியற் கட்சிகள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் மற்றும் அவை கடைப்பிடித்து வரும் அணுகுமுறைகள் நாட்டில் மீண்டும் இரத்தக்களறி மற்றும் இனவாதத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளன என்று விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் நேற்று ஈச்சிலம் பத்தை செம்பகா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தேசிய எழுச்சிக் கூட்டத்தில் பேசும் போது தெரி வித்தார். இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை தமிழீழ எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை வெருகல் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செஞ்சேரன் ஏற்றினார். மூதூர் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் தங்கன் தலைமை வகித்தார். சஞ்சய் கருத்துரை வழங்கினார். சிறப்புரையை திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் நிகழ்த்தினார்.

எழிலன் தொடர்ந்து பேசியதாவது. இலங்கை அரசு மற்றும் அரசியல் கட்சிகளின் இனவாதப்பேச்சுக்கள் மீண்டும் யுத்தம் மூளக்கூடிய அபாயத்தை ஏற்படுத்தியிருப்பதாக மக்களும், சர்வதேச சமுகத்தினரும் உணர்ந்துள்ளனர். அவ்வாறு யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தயாராகவே உள்ளனர்.

கடந்த அரசும் தமது கைகளில் அதிகாரத்தை வைத்திருந்த போது தமிழ்த்தேசியப் பிரச்சினைக்குச் சரியான தீர்வை முன்வைக்கவில்லை. மா்றிமாறிப் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தயாராக இல்லை என்பதை அவற்றின் கடந்த கால நடவடிக்கைகள் எடுத்துக்காட்டியுள்ளன. தற்போதைய அரசும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கத்தயாராக இல்லை. யுத்தத்துக்குள் நாட்டை இட்டுச்செல்லும் முயற்சியில் தான் தற்போதைய அரசாங்கம் ஈடுபடுகின்றது என்று எழிலன் தெரிவித்துள்ளார். (27)

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகியமை குறித்து சனாதிபதியின் கவலை ஆச்சரியமளிக்கின்றது

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை கடுமையாக விமர்சித்த சனாதிபதி தற்போது இந்த உடன் படிக்கை கேள்விக்குறியாக்கியுள்ளமை தொடர்பாக கவலையை வெளிப்படுத்தியுள்ளமை ஆச்சரியம் அளிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர் ரவீந்திரரத்தெனிய “ யுத்தநிறுத்த ஒப்பந்தம் உறுதியற்ற நிலைக்குச் சென்றுள்ளமையாலும் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பாகவும் தாம் கவலை அடைந்துள்ளதாக சனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது எனவும் சனாதிபதி தெரிவித்திருந்தார். இது சாதாரண நடைமுறைகளுக்கு முரணானது எனவும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றெனவும் சனாதிபதி கூறியிருந்தார்.

இவ்வாறு கூறிய சனாதிபதி இப்பொழுது இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கேள்விக்குறியாகியுள்ளமை தொடர்பாகக் கவலை தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் போது அரசின் பிரதான பங்காளியான மக்கள் விடுதலை முன்னணி நாடு முழுவதிலும் பாரிய சுவரொட்டிப் பிரசாரங்களை மேற்கொண்டு இதற்கு எதிராக செயற்படுகின்றது”. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹிங்குராங்கொட விகாரைச் சம்பவங்கள் எமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் சதி

### ஜாதிகஹெல உறுமய பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹிங்குராகொட புபுல விகாரையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் ஜாதிகஹெல உறுமய கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் என அந்தக் கட்சி கூறுகின்றது.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தேரர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் என கட்சியின் ஊடகப் பேச்சாளர் அநுரலியரத்ன தேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஹிங்குராங்கொட விகாரையின் விகாராதிபதியைப் புலிகள் கொலை செய்யவில்லையென நாம் கருதுகின்றோம். இந்தச் சம்பவம் அரசியல் சதித்திட்டமாக இருக்கலாம் என நம்புகின்றோம். இந்த விடயம் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நாம் பொலிசாரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் தொடர்பாக சனாதிபதி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு முன் வருவாராயின் அது நகைப்பிற்குரிய விடயம்.

“ஐக்கிய தேசியக்கட்சி அர சாங்கத்தின் கீழ் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்த இணக்கப்பாடு ஏற்படவில்லை.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவின் அனைத்துக் கொள்கைகளும் புலிகளுக்குச் சார்பானவை என்று சனாதிபதி அரசாங்கத்தைக் கலைத்தார்.இன்று சனாதிபதி அந்த யோசனைகளைச் செயற்படுத்த முற்படுவாரேயாயின் தேர்தல் முடிவு களுக்கிடையே இது உண்மையில் நகைப்பிற்குரிய விடயமென்றே கூறவேண்டும்” என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் 17ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார்

ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ்கா பிஸ்ஸர் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின்போது ஜேர்மனின் வெளியுறவுத்துறை அமைச்சர், இலங்கையின் சனாதிபதி, பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

### கப்பல்...

இதனால் கப்பலின் அடிப்பாகம் முழுமையாக சேதமடைந்துள்ளது. கப்பலை பழையநிலைக்குக் கொண்டு வருவதில் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன குறிப்பிட்ட கப்பலில் பெருமளவு கோதுமை எடுத்து வரப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

### இலங்கை...

நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்திய அரசு தொலைநோக்குடன் சிந்தித்து இதுவரை கடைப்பிடித்து வந்த அணுகுமுறையை மாற்றி சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெற தனது பங்களிப்பைச் செய்ய வேண்டும். பிரதமரைச் சந்திக்கும்போது தேவைப்பட்டால் இது குறித்துப் பேசுவேன் என்றார்.

### சிறில...

பிரதம நீதியரசர் தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளனர்.

இதனிடையே பிரதமர் நீதியரசர் தலைமையிலான குழுவினரது விஜயத்தை முன்னிட்டு முக்கிய பகுதிகள் பலவற்றினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (27)

### வெடி...

முனைகின்றனர். இவ்வாறான சக்திகளுக்கு விலைபோகாது தவிர்த்து நடக்க வேண்டும் என்று அறிவுரை கூறி விடுதலைப் புலிகள் இவரை வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இதேவேளை நேற்று முன் தினம் கைக்குண்டுடன் கைதான பூசாரியும் விசாரணையின்பின் நேற்று விடுவிக்கப்பட்டார்.

# மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண

# சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

### மனித உரிமைகள் செயலகக் குழுத்தலைவர் நோர்வேத்தூதரிடம் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

சமாதானக் காலத்திலும் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிற்கு செல்லமுடியாத நிலையில் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்திருப்பது சமாதான காலப்பகுதியில் தமிழ்மக்களின் கல்விநிலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்காமையால் அவர்களின் கல்விநிலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நிலையை மாற்றம் செய்து மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கைக்கான நோர்வேத் தூதுவரிடம் முன்வைத்தோம். என அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்ட வட-கிழக்கு மனித உரிமைகள் செயலக குழுத் தலைவர் எம்.எஸ். கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்துக்கு சென்று அதன் செயற்பாடுகள் தொடர்பாக நோர்வேத் தூதுவர் கேட்டறிந்த வேளையே அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

இன்றைய சந்திப்புப் பற்றி கருத்துத் தெரிவித்த அருட்தந்தை மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் வட-கிழக்கில் வாழ்கின்ற மக்களின் துன்ப,துயரமான பிரச்சினைகளுக்காகச் செயற்பட அமைக்கப் பட்டிருக்கும் இந்த செயலகத்தின் செயற்பாடுகளைத் தான் புரிந்து கொள்கின்ற அதேவேளை இதை உருவாக்கியமையை இட்டு தான் பெருமகிழ்வடைவதாகவும் இதற்குத் தம்மாலான உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தாக அடிகளார் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு நேற்றுப் பிற்கல் கிளிநொச்சியில் உள்ள வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் நோர்வேத் தூதுவர் கான்பிரஸ்கார் தலைமையிலான குழுவினரும், மனித உரிமைகள் செயலக சார்பில் அருட்தந்தை எஸ்.எம். கருணாரட்ணம் அடிகளார் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர். (லோ)



மனித உரிமைகள் குழு செயலக சந்திப்பு

### மட்டு...

யாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் ஆகிய இருவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டது. தொடர்ந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த சேனாதிராசா நேற்றுப் பிற்பகல் வீரச்சாவடைந்தார்.

இவரது வித்துடல் விடுதலைப்புலிகளால் எடுத்துவரப்பட்டு மாவட்டச் செயலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இவ்வீரச்சாவு செய்தி வெளிவந்ததையடுத்து மட்டக்களப்பு நகரம் சோகத்தில் ஆழ்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. நேற்று இரவு கொக்கட்டிச்சோலை மாவட்டச்செயலகத்திற்கு வித்துடல் தாங்கிய பேழை எடுத்து வரப்பட்ட போது விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளிகள், போராளிகள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

### யுத்தத்தை...

இந்த விடயம் பற்றி அரசுக்கு தெளிவாகப் பலதடவை கூறியிருக்கிறோம். அதையே இன்றும் கூறுகின்றோம். சிறிலங்கா அரசும் படைத்தரப்பும் தான் கருணாவை வைத்துக் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றன. குறிப்பாக ஈ.பி.டி.பி போன்ற தேசவிரோத கும்பல்களும் இவருடன் இணைந்து செயற்படுவதை அண்மைய நாட்களில் மக்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். பீ.பீ.சி, ரீ.பி.சி போன்ற வானொலிகள் ஊடாக இங்கே நடக்கின்ற குழப்பங்களுக்கு இலங்கை அரசின் அமைச்சரவையில் இருக்கும் டக்ளஸ் தேவானந்தா துணைபோவதாக கருணாவே தனது வாயால் கூறியிருக்கிறார். இதனையும் நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

*பேச்சுவார்த்தைக்கான கால அட்டவணை தொடர்பாக ஏதாவது பேசப்பட்டதா?*

பேச்சுவார்த்தைகளைப் பொறுத தவரை எமது நிலைப்பாடு உறுதியானது. இது சம்பந்தமாக அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுத்து எமது கவனத்திற்கு அனுசரணையாளர்கள் ஊடாக கொண்டு வரும் போதுதான் இது பற்றிய எமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்த முடியும்.

*பேச்சுக்கள் ஆரம்பிப்பது பற்றிய காலக்கெடு எதையாவது அரசிற்கு வழங்கியிருக்கிறீர்களா?*

எங்களைப் பொறுத்தவரையில் பேச்சுக்களுக்கு முன்னாள் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை மிக மிகமுக்கியமானது. யுத்தமற்ற சுமுகமான சூழல் இருக்கின்ற போதுதான் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமாகும். எனவே ஒப்பந்த விதிகளுக்கமைவாக யுத்த நிறுத்த உடன்படிக்கையில் 1.8 என்ற சரத்தின்படி வடகிழக்கின் ஆயுதக் குழுக்களின் ஆயுதக்களைவும் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதும் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது இருக்கின்ற புதிய சூழலில் கருணா குழு என்ற ஒரு குழுவை உருவாக்கி அதனை எமது மக்கள் மீது திணிக்கப்படுகின்ற போது சுமுகமான நிலைமைகளை அது சீர் குலைக்கும் என்பதை நாம் இன்றும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

*யுத்த நிறுத்த உடன்படிக்கை செம்மையாக அமுல்படுத்தப்படும் பட்சத்தில்தான் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்கிறீர்களா?*

இது பற்றி நாம் உடனடியாக எமது கருத்துக்களைக் கூறமுடியாது. ஏனெனில் யுத்த நிறுத்த நிலைமைகள் சீர்குலைந்து போகின்ற தன்மையே இன்று அனைவராலும் கரிசணையுடன் பார்க்கப்படும் விடயமாகவுள்ளது. ஆகவே அந்த விடயத்தை நாம் இன்றைய பேச்சுக்களில் கவனத்தில் எடுத்தோம். பேச்சுவார்த்தை தொடர்பான எமது நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

இடைக்கால நிர்வாகத்தைப் பற்றி பேச்சுஆரம்பமாகி அதன் பின்னர் தான் இறுதித்தீர்வு பற்றி பேசவேண்டும் என்பது எமது நிலைப்பாடு. இது பற்றி அரசாங்கம் தனது தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கும் பட்சத்தில்தான் நாம் எமது நிலைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

*போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி கொழும்பில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம்–தற்போது ஏற்பட்டு வரும் வன்செயல்கள் இதன் பின்னணியில் தற்போது சமாதான முயற்சிகள் எந்த நிலைமையில் இருக்கிறது?*

சமாதான முயற்சிகள் மிகப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு நிற்கிறது. அதனைத் தான் அடிக்கடி நோர்வேத்தரப்பு இங்கும் அங்குமாக சென்று நிலைமைகளை சீராக்க முயன்றுகொண்டிருப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். அவர்களின் இன்றைய பயணத்தின் போதும் நிலைமையின் உக்கிரத்தை உணர்ந்து இரு தரப்பையும் சந்தித்துப் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்குள் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதை வைத்துக் கொண்டு நிலைமை மிக இறுக்கம் அடைந்திருப்பதை நீங்கள் உணரலாம்.

*போர் நிறுத்த ஒப்பந்தச் செயற்பாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி கொழும்பில் ஏற்பட்ட தற்கொலைத் தாக்குதல் இதன் பின்னணியில் இப்போது ஏற்பட்டிருக்கும் போர்நிறுத்தச் செயற்பாடுகள் பற்றி நீங்கள் கவலை அடைந்திருக்கிறீர்களா?*

நாங்கள் மிகக்கவலை அடைந்திருக்கின்றோம். எமது மக்கள் ஆத்திரமும் விரக்தியும் அடைந்திருக்கிறார்கள் இன்று சமாதானச் சூழலிலும் படுகொலைகள், குழப்பங்கள் தொடர்ந்து நடை பெறுவது என்பது எமது மக்களுக்கு கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

*இந்த விடயத்தில் இந்தியா ஏதும் பங்களிப்புச் செய்ய முன் வந்திருக்கிறதா?*

எம்மைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தவர் அனைவரும் இலங்கைத்தீவில் அமைதி வழியில் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனை கொண்டிருக்கிறார்கள். அத்தோடு அந்த அடிப்படையில் இந்தியா உட்பட அனைவருமே கவலை அடைந்திருக்கிறார்கள் அனைவரும் சமாதானச் சூழலைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற தமது விருப்பத்தை தெரிவித்திருக்கிறார்கள்.

*சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் கருணாவிவகாரம் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது இது தொடர்பாக உங்களது தெளிவான நிலைப்பாட்டை இன்று அரசுக்கு தெரிவித்திருக்கிறீர்களா?*

சமாதானச் சூழலின் அடிப்படையே யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளாகும் போது ஒட்டுமொத்த சமாதான நடவடிக்கையும் நெருக்கடிக்குள்ளாகும். ஆகவே கருணா விவகாரத்தை வைத்துக் கொண்டு இன்று சீர்குலைவுகளையும்-படுகொலைகளையும்-குழப்பங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வது என்பது ஒட்டுமொத்த சமாதான நடவடிக்கைகளையும் சீர்குலையச் செய்யும் என்பதை நாம் இன்று வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகவே இவற்றுக்குத் துரித கதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற செய்தியை இன்று அனுசரணையாளர்கள் சம்மந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வார்கள் என்பதை நாம் முழுமையாக நம்புகிறோம் என்றார்..

நேற்றுக்காலை 10.00மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் ஆரம்பமான பேச்சுக்கள் நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர். சு.ப. தமிழச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், மட்டு-அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், செல்வி, ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வேத் தரப்பில் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் கான்ஸ்பிரஸ்கார் மற்றும் அவரது உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக காலை 9.45 மணிக்கு விசேடஉலங்கு வானூர்திமூலம் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த இவர்களை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன், பவாநந்தன் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர். (லோ)


நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்களுக்கான

செய்தி - விளம்பர பணிமனை

## திறப்பு விழா

இடம் : 152 யாழ்சாலை. கிளிநொச்சி.

காலம் : 14-07-2004

நேரம் :காலை 10.30 மணி

மேற்படி பணிமனையை

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

**திரு.நா வேதநாயகம் அவர்கள்**

திறந்துவைக்கவுள்ளார்.

கிளி /முல்லை மாவட்ட மக்கள்

அரச - அரசசார்பற்ற நிறுவனங்கள்

வர்த்தக - வாசக பெருமக்கள்

கலைஞர்கள் - படைப்பாளிகள்

அனைவரும் எம்முடனான தொடர்புகளை

இப்பணிமனையூடாக மேற்கொள்ளமுடியும்

என அன்புடன் தெரிவிக்கின்றோம்.

நமது ஈழநாடு

தரமும் தனித்துவமுமிக்க தமிழ்மக்களின் நாளிதழ்

267, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
021-222 5107 - 021-222 3922

152, யாழ்சாலை,
கிளிநொச்சி.
தொலைபேசி
021-228 5980

(சி:10021)


## சாவு அறிவித்தல்

### வேல்முருகையா இந்திராணி

*கல்வயலைப் பிறப்பிடமாகவும், பெரிய பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட வேல்முருகையா இந்திராணி 13.07.2004 நேற்று மாலை காலஞ்சென்று விட்டார். அன்னார் வினாசித்தம்பி சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், வேதவனம் வேல்முருகையாவின் மனைவியும், வேதவனம் நாகம்மா ஆகியோரின் மருமகளும், ஜெயம், பகீரதி,சஞ்சயன், கஜன், பார்த்தீபன், பனுஸ் ஜா,பவித்திரா, ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாலசிங்கம், கந்தசாமி, ஈஸ்வரன், திருச்செல்வம் ஆகியோரின் சகோதரியும், யோகம்மா, ஏரம்பமூர்த்தி, இராசபூபதி, வரலக்சுமி, கண்ணா கனகாம்பரமேஸ்வரி, தியாகராசா, வீரவாகு, கணேசமூர்த்தி, சரஸ்வதி, ஞானகௌரி, அம்பிகாபதி, திருச்சிற்றம்பலம், ஞானசபேஸ், நடனவடிவேல், ஆகியோரின் மைத்துனியும் ஆவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று புதன் கிழமை (14.07.2004) பிற்பகல் 3.00 மணியளவில் கல்வயல் விநாசித்தம்பி திருச்செல்வத்தின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியை களுக்காகப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

தகவல்:-
வேல்முருகையா (கணவர்)
பொறிக்கடவை அம்மன் கோவில் பூசகர்.
சகோதரன்- திருச்செல்வம்.

(சி.10115)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பல...யில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 14ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.